விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 07 சனிக்கிழமை (19.02.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 062

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

யாழ்ப்பாண மாவட்டம் உட்பட

# 75 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்க முடிவு

## தேர்தல் திணைக்களத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

**யாழ்.மாவட்டம் உட்பட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை எதிர்த்து கட்சிகளினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள 75 உள்ளூராட்சி சபைகளிற்கான தேர்தலை ஒத்திவைப்பதற்கு தேர்தல்கள் திணைக்களம் முடிவு செய்துள்ளது.**

இது தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத் தகவல்களிலிருந்து மேலும் தெரியவருவதாவது,

நாடளாவிய ரீதியில் 301 உள்ளூராட்சி சபைகளுக்கு எதிர்வரும் மார்ச் 17ஆம் திகதி தேர்தலை நடத்த தேர்தல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்தது.

இதற்கான வேட்பு மனுத் தாக்கல் கடந்த ஜனவரி 24 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

இதில் யாழ்.மாவட்டத்தில் 13 பிரதேச சபைகள், 03 நகர சபைகள் உட்பட 16 உள்ளூராட்சி சபைகளுக்குமான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பு மனுக்கள் தேர்தல்கள் திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது. *(20ஆம் பக்கம் பார்க்க)*

# இந்திய மீனவர்கள் நேற்று விடுதலை



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மற்றும் மாதகல் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 136 இந்திய மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை இரண்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டிருந்த நிலையிலேயே மேலிட உத்தரவின் பேரில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மீனவர் விவகாரம் தொடர்பாக வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸுடன் தொலைபேசியில் உரையாடிய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, இலங்கையில் சிறையில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் இன்று (நேற்று) *(20ஆம் பக்கம் பார்க்க)*

# குருநகர் மீனவர் நால்வரை தமிழக மீனவர்கள் பிடித்தனர்

(சென்னை)

குருநகரைச் சேர்ந்த மீனவர்கள் நால்வர் நேற்று அதிகாலை இந்திய மீனவர்களினால் மடக்கிப் பிடிக் கப்பட்டு மண்டபம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குருநகரைச் சேர்ந்த பிரான்ஸிஸ் (வயது 60), ...ஸீஸியஸ் (வயது 49), ராஜலிங்கம் (வயது 59), அருள்ராஜ் (வயது 33) ஆகிய நான்கு மீனவர்களும் நேற்று அதிகாலை மீன்பிடித் தொழிலுக்குச் சென்றிருந்தனர். இவர்களின் படகு இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறினால் இந்திய எல்லைக்குள் நுழைந்த போது அங்கு மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் இந் நால்வரையும் மடக்கிப் பிடித்து கரையோரக் காவல் துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்கள் நால்வரும் தற்சமயம் மண்டபம் முகாமில் தடுத்துவைக்கப்படுள்ளதாக தமிழ்நாட்டு மீனவர் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். இவர்களை விடுவிப்பது தொடர்பான நடவடிக்கைகள் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று *(02ஆம் பக்கம் பார்க்க)*

## ஐ.தே.கவுக்கு தாவுவதற்கு முக்கிய புள்ளிகள் முயற்சி

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கியஸ்தர்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இரகசியப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக புலனாய்வுத் தரப்பினர் ஜனாதிபதியை எச்சரித்துள்ளனர்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் போது ஆளும் கட்சியின் வாக்கு வீதத்தில் சரிவு ஏற்படுமிடத்து குறைந்தபட்சம் பத்துக்கு மேற்பட்ட முக்கியஸ்தர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் தாவும் உத்தேசத்துடன் இருப்பதாக புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கை தெரிவிக்கின்றது.

அதற்கு மேலதிகமாக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து *(20ஆம் பக்கம் பார்க்க)*

# அரசியல் தீர்வை அரசு முன்வைத்தால் 'போர்க் குற்றத்தை' விலக்க முடியும்

## கூட்டமைப்பு நிபந்தனை- டெய்லி மிரர் தகவல்

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஏற்படுத்தப்படும் பட்சத்தில் அரசுக்கு எதிராக முன்வைக்கப்படும் போர் மீறல் குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சம்மதம் தெரிவித்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லி மிரர் நாளேட்டின் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஆலோசனைக்கு அமையவே இந்நகர்வு மேற்கொள்ளப்படுவதாகவும் இக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பாக அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவது அறிந்ததே. இப் பேச்சுவார்த்தைக்கு மாற்றாக அரசாங்கத்திற்கு எதிராக எழுப்பப்படும் போர் மீறல் குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொள்ளுமாறு ஆரம்பத்தில் அரசாங்கத்தினால் கோரப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனாலும் அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படும் பட்சத்தில் இந் நிபந்தனையை ஏற்பதற்கு கூட்டமைப்பு உடன்பட்டுள்ளதாகவும் இக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர் மீறல் குற்றச் சாட்டுக் *(20ஆம் பக்கம் பார்க்க)*

புதிய முதலீட்டு வாய்ப்பு புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை
யாழ் மக்களுக்கான...
www.cse.lk
'பங்குச்சந்தை முதலீடுகள் தொடர்பான கருத்தரங்கு'
இடம் : நெல்லை முருகன் திருமண மண்டபம் - நெல்லியடி.
காலம் : 2011 பெப்ரவரி 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரை
பங்குச்சந்தை பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
CSE கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
மேலதிக தகவல்களுக்கு:
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணக்கிளை,
398/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1455, 021 5672444
அனுமதி இலவசம்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# மின் தடைபற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று சனிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சி பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

காலை 9.00மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை புத்தூர், வாதரவத்தை, வீரவாணி, ஆவரங்கால், ஊறணி ஆகிய இடங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 முதல் மாலை 5.00மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (ந-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் இல்லாத பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியும், சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் அதிவிசேட சித்தியும் கொண்டவர்கள் இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்க முடியும் எனவும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ந)

## குருநகர் மீனவர் நால்...

தெரிவித்தார். இதேவேளை இச்செய்தி வதந்தி எனவும் கடலுக்குச் சென்றவர்களின் தொலைத் தொடர்பாடலில் ஏற்பட்ட தடங்கலினால் இவ்வாறான வதந்திகள் வெளிவந்ததாகவும் வடமராட்சி மீனவ சமாசத் தகவல்கள் நேற்றிரவு தெரிவித்தன.

# திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்தியத்தில்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் பட்டமேற்கல்வி டிப்ளோமா ஆசிரிய மாணவர்களுக்கான சிறுவர் உரிமைகள் பாட நூல்களை இன்றும் நாளையும் பெற்றுக்கொள்ளலாமென இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் திறந்த பல்கலை கழகத்தின் மொழிக்கற்கைகள் துறையினால் நடத்தப்படும் அடிப்படைச் சிங்களக் கற்கை நெறி (Basic Course in Sinhala) மற்றும் அடிப்படைத் தமிழ் கற்கை நெறிகளுக்கான (Basic Course in Tamil) விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாமென இணைப்பாளர் தெரிவித்துள்ளார். விண்ணப்ப முடிவுத்திகதி 06.03.2011 ஆகும்.

இலங்கை திறந்த பல்கலை கழகத்தின் சமூக கற்கைகள் துறையினால் நடத்தப்படும் சுற்றுலா துறையும் விடுதிச்செயற்பாடுகளும் கற்கை நெறி 2011/2012 ஆம் கல்வியாண்டிற்கு விண்ணப்பித்து இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் இறுதித் திகதியான இன்று யாழ்.பிராந்தியநிலையத்தில்பதிவுகளை மேற்கொள்ள முடியுமென இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ந)

## ஒப்பந்தகாரர்களுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சகல பாடசாலை வேலை ஒப்பந்தகாரர்களுடனான கலந்துரையாடல் ஆளுநர் தலைமையில் எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண நூல் நிலையத்தில் நடைபெறும்.

சகல கட்டிட ஒப்பந்தக்காரர்களும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் தவறாது கலந்துகொள்ளும்படி யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (ந-2)

# ‘மகராக்ஷயா’ நாடகம் யாழ்ப்பாணத்தில் இன்று



2011ஆம் ஆண்டில் இந்திய தேசியநாடகவிழாவில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்ததர்மசிறி பண்டாரநாயக்காவின் நெறியாள்கையில் உருவானமகராக்ஷயா நாடகம் இன்று மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும். இந்நாடகத்தை இலவசமாகப்பார்க்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## பொதுக் கூட்டம் பிற்போடப்பட்டது


(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கலிகைக்கந்தசுவாமி கோயிற் பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் தொடர்பான விசேட பொதுக் கூட் டம் 22.02.2011 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு பிரதேசசெயலர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு இருந்தது.

எனினும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் மேற்படி கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 22ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என கரவெட்டி உதவிப் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தெரிவித்துள்ளார். (ந)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

### அமரர் இரத்தினம் பிறேமரட்ணம் (மல்லி அண்ணா)



கடந்த 23.01.2011ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம், அமரர் இரத்தினம் பிறேமரட்ணம் (மல்லி அண்ணா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 20.02.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்திய கிரியைகள் 22.02.2011 செவ்வாய்க்கிழமை மதியம் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
மனைவி, மருமகன், பிள்ளைகள்

வி.மு.வீதி,
பருத்தித்துறை.

(சி-2486)

## மாணவனின் மரணம் டெங்கு காரணமல்ல

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன் தர்மரட்ணம் துஷாந் டெங்கு காய்ச்சலினால் மரணமடையவில்லை என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதனை அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் உறுதி செய்துள்ளதாகவும், பிரஸ்தாப மாணவனின் மரணத்திற்கு செப்ரிக் சொக் (Septic Shock) என்ற மருத்துவ ரீதியான விடயமே என்றும் தெரிவித்துள்ளார். (ந)

## வீடு வாடகைக்குத் தேவை


யாழ்.போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் தங்குவதற்கு உகந்த சகல வசதிகளுமுடைய ஒவ்வொன்றிலும் 25பேர் தங்கக்கூடிய இரண்டு வீடுகள் வாடகைக்கு தேவைப்படுகின்றது. வீடு வைத்தியசாலையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்திற்குள் இருக்க வேண்டும். வீடு வாடகைக்கு தர விரும்புவர்கள் நேரடியாகவோ அல்லது பின்வரும் விலாசத்திற்கு தபால் மூலமோ மாதவாடகையுட்பட விபரங்களை 28.02.2011க்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021-2227351

(சி-2481)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
1991
06
03

இறப்பு
2009
02
11

### பாஸ்கரலிங்கம் நிதீபன் (சுபாஸ்)

எங்கிருந்தோ வந்த செல்லால்
எம்மைப் பிரிந்தாய் தம்பி
இங்கிருப்பாய் எம் நெஞ்சில்
என்றும் நீங்காது நிதீபனாய்

திதி: 2011.02.19

சித்தன்குறிச்சி, பூநகரி
இங்ஙனம்- குடும்பத்தினர்

(சி-2485)

## சித்தமருத்துவ பிரிவின் வெள்ளிவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சித்தமருத்துவ பிரிவு வெள்ளி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் 5மணிவரை கைதடி சித்த மருத்துவப் பிரிவு அரங்கத்தில் டாக்டர் ஐ.ஜெபநாமகணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் என்.சண்முகலிங்கன், யாழ்.பல்கலைக்கழக கைதடி சித்தமருத்துவப் பிரிவுத் தலைவி திருமதி திலகேஸ்வரி குமுதரஞ்சன், நாவின்னை மகரகம ஆயுர்வேத திணைக்கள ஆணையாளர் பி.எஸ்.கே.ஆர். வீரக்கோன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்விழாவில் 25வருடகாலம் தொடர்ந்து சித்தமருத்துவத்துறையில் சேவையாற்றியவர்களை கௌரவித்தல், 25 வருட கால சேவை பூர்த்தியாக முதல் இளைப்பாறிய உத்தியோகத்தர்களை கௌரவித்தல் உள்ளிட்ட பல விடயங்கள் இடம்பெறவுள்ளன. (ந-9)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்கள்

கணவதி பாலசுந்தரம் பாலசுந்தரம் பவானி



தோற்றம்
03
08
1965

தோற்றம்
23
05
1969

மறைவு: 2009.02.19

ஈராண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு மறைந்திடுமோ?
அன்பு பொழியும் உங்கள் முகம் காண
நித்தம் நித்தம் ஏங்கிநாம் தவிக்கிறோம்.

- குடும்பத்தினர்

நி.முகவரி: எழுதுமட்டுவாள் தெற்கு
எழுதுமட்டுவாள்.

த.முகவரி: மாதா கோவிலடி
துன்னாலை, கரவெட்டி

(சி-2484)

# மகுடம் யாருக்கு?

உலகம் முழுவதும் உள்ள கிரிக்கெட் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த 10ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் திருவிழா இன்று ஆரம்பமாகிறது.

15 ஆண்டுகளின் பின் இந்தியத் துணைக்கண்ட நாடுகளில் நடக்கும் இந்தத் தொடரில் 14 அணிகள் பங்கேற்கின்றன. அவை இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு லீக் சுற்றில் மோதவுள்ளன. லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முன்னிலை பெறும் தலா 4 அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெறும்.

இம்முறை யார் உலக சம்பியன் என்ற ஆரூடங்கள் கடந்த சில மாதங்களாகவே வலம் வந்துகொண்டிருக்கின்றன. இதில் பயிற்சி ஆட்டங்கள் நிறைவடைந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பில் இந்திய அணி 22 வீதமும் இலங்கை, தென்னாபிரிக்க அணிகள் 21 வீதமும் பெற்று முன்னிலையிலுள்ளன.

## இலங்கை.

எதிரணிகளால் அபாயகரமான அணி என்று வர்ணிக்கப்படுவது இலங்கை. சொந்த மண்ணில் இலங்கை அணியை அசைத்துப் பார்ப்பது கடினம்.

கடந்த 10 ஆண்டுகளில் இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அணிகளில் பெரும்பாலானவை வெறும்கையுடன் திரும்பியிருப்பதே அதற்குச் சான்று.

உலகக் கிண்ண இறுதிப் போட்டி தவிர, மற்ற எல்லா ஆட்டங்களும் சொந்த மண்ணில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றிருப்பது, இலங்கை மீண்டும் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்குச் சாதகமாக அமைந்துள்ளது.

## இந்தியா

1983 ஆம் ஆண்டு கபில்தேவ் தலைமையில் இந்திய அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது. அதன் பின்னர் 28 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. முகமெட் அசாருதின், கங்குலி, ராவிட் தலைமையில் ஏமாற்றமே மிஞ்சிய நிலையில் இம்முறை அதிர்ஷ்டக்கார அணித் தலைவர் தோனி தலைமையில் இந்திய அணி களமிறங்குகிறது.

சொந்த மண்ணில் விளையாடுவதனால் பழக்கப்பட்ட ஆடுகளங்கள், சீதோஷ்ண நிலை இவை எல்லாம் இந்திய அணிக்குச் சாதகமான அம்சங்கள்.

ஆனால் மிகப் பெரிய எதிர்பார்ப்பால் உருவாகியுள்ள நெருக்கடியைச் சமாளிப்பதில் தான் இந்திய அணியின் வெற்றி, தோல்விகள் அமையும் என்கிறார்கள் நிபுணர்கள்.

## தென்னாபிரிக்கா

பலமான அணியாக நுழைவது, அதன் பின்னர் வருண பகவானாலும் இறுக்கமான சூழலிலும் கோட்டை விடுவது.... என்று தென்னாபிரிக்காவின் இதுவரையிலான உலகக்கிண்ண வரலாற்றுக் கதையை ஒரு வரியில் சொல்லி விடலாம். இந்த முறை பழைய சோகங்களுக்கு முடிபு கட்டும் குறிக்கோளுடன் படையெடுத்து வந்திருக்கிறார்கள்.

உலகக் கிண்ணத்தை வெல்லும் பிரகாசமான வாய்ப்பில் உள்ள அணிகளில் தென்னாபிரிக்காவும் ஒன்று. நெருக்கடியான கட்டத்தில் கோட்டை விடும் தங்களது பலவீனத்தை இம்முறை சரி செய்துவிட முடியும் என்று நம்புகிறார்கள்.




## அவுஸ்திரேலியா

வோர்ன், மெக்ராத், ஹைடன், கில்கிறிஸ்ட் ஆகியோர் திடீரென ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட பெரிய வெற்றிடத்தை இன்றும் நிரப்ப முடியாமல் அவுஸ்திரேலிய அணி தவித்துக் கொண்டிருக்கிறது. அதன் விளைவுதான் சமீபத்தில் அந்த அணிக்கு விழுந்த அடிகள். ஆனாலும் அவுஸ்திரேலிய அணியை எந்த வகையிலும் குறைத்து மதிப்பிட முடியாது. "ஹட்ரிக்" உலகக்கிண்ண நாயகனாக விளங்கும் அவுஸ்திரேலியா உலகக்கிண்ணத் தொடரில் 29 ஆட்டங்களில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றுள்ளது.

இம்முறை இளமையும் அனுபவமும் கலந்த அணியாகக் களமிறங்கவுள்ளது.

நெருக்கடிகளை கச்சிதமாக கையாள்வதில் அணித்தலைவர் பொன்டிங்குக்கு நீண்டகால அனுபவம் உண்டு. ஆனால் அணியில் சுழல் பந்து வீச்சாளர்கள் இல்லாததும் துடுப்பாட்ட வீரர்கள் சுழல் பந்துவீச்சை எதிர்கொள்வதற்கு த்டுமாறுவதும் அவர்களின் பலவீனம்.


கடந்த உலகக்கிண்ணத் தொடருக்கு முன்பாக இரு முக்கிய தொடர்களில் தோல்வியடைந்து உள்ளே நுழைந்தது அவுஸ்திரேலிய அணி. அதன் பின்னர் அந்த உலகக் கிண்ணத் தொடரில் அனைவரையும் ஓட ஓட விரட்டியதை மறந்து விட முடியாது.

## மேற்கிந்தியத் தீவுகள்

ஒரு காலத்தில் ஜாம்பவானாகத் திகழ்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, கழுதை தேய்ந்து கட்டெறும்பான பழமொழிக்கு இப்போது உதாரணமாக இருந்து கொண்டிருக்கிறது. ஹயில், பொல்லார்ட், பிரவோ என்று வெற்றி தேடித் தரக் கூடிய துடுப்பாட்ட வீரர்கள் இருக்கிறார்கள்.

பந்து வீச்சும் திறமையாக உள்ளது. ஆனாலும் ஒரே நேரத்தில் இவர்கள் ஒன்றிணைந்து செயற்படாததால் இன்று கண்டுகொள்ளப்படாத அணியாகத்தான் இருக்கிறது.

## உலகக் கிண்ணம்



தற்போதைய உலகக் கிண்ணம் 60 செ.மீ. உயரம், 11 கிலோகிராம் எடை கொண்டது.

வெள்ளியால் செய்யப்பட்டு தங்க முலாம் பூசப்பட்டுள்ளது. மூன்று விக்கெட்டுக்களுக்கிடையில் 'பெயில்ஸ்கள்' பந்து போன்ற உலகத்தைத் தாங்குவது போல் அமைப்புக் கொண்டது.

இவை கிரிக்கெட்டின் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத் தடுப்பைக் குறிக்கும்.

## 220 நாடுகளில் நேரடி ஒளிபரப்பு


உலகக் கிண்ணத் தொடரை ஒளிபரப்புச் செய்யும் உரிமையை ஈ.எஸ்.பீ. என் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சனல்கள் பெற்றுள்ளன.

இதற்காக ஐ.சி.சி. இற்கு ரூ.22 ஆயிரம் கோடி (இலங்கைப் பெறுமதியில்) கொடுத்துள்ளது.

அனைத்துப் போட்டிகளும் 220 நாடுகளில் ஒளிபரப்பப் படவுள்ளன.

உலகக் கிண்ண தொடரின் அதிகாரபூர்வ சின்னமாக இம்முறை கார்ட்டூன் வடிவ 'ஸ்டம்பி' என்றயானை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இது பத்து வயதுள்ளதாகவும் கிரிக்கெட் மீது அதிக ஆர்வம் கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.






## பரிசு ரூ. 112 கோடி

உலகக் கிண்ணத் தொடரின் ஒட்டுமொத்த பரிசுத் தொகை இம்முறை இலங்கைப் பெறுமதியில் ரூ.112 கோடி என அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பியனாகும் அணிக்கு ரூ.34 கோடியும் இரண்டாவது இடம் பெறும் அணிக்கு ரூ.17 கோடியும் வழங்கப்படவுள்ளது.

# தென்னையிலிருந்து தவறி வீழ்ந்த குடும்பஸ்தர் படுகாயம்

அல்வாய் கிழக்கு பெரியார் பகுதியில் 20 அடி உயரமான தென்னை மரத்திலிருந்து தவறிவிழுந்த குடும்பஸ்தர் ஒருவர் பலத்த காயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்குவதற்காக ஏறியபோதே மேற்படி குடும்பஸ்தர் தவறி விழுந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் அல்வாய் வடக்கு முத்துமாரியம்மன் கோவிலடியைச் சேர்ந்த குணரட்ணம் தமிழ்ச் செல்வன் வயது (36) என்ற குடும்பஸ்தரே வலது கால் முறிந்த நிலையிலும் முகத்திலும் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார். (ஸ்ரீ-3-24)

# அதிபர் பதவி வெற்றிடம்

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை, வரணி மகாவித்தியாலயம், போக்கட்டி றோ.க.த.க.பாடசாலை ஆகியபாடசாலைகளில் நிலவும் அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு வடமாகாண சேவைக்குட்பட்ட தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டுமென தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார்.

வரணி மகாவித்தியாலய அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்தவர்கள் அல்லது கல்வி டிப்ளோமாவுடன் கூடிய பல்கலைக்கழக பட்டத்தையுடைய இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2:II ஆகியோர் விண்ணப்பிக்க முடியும்.

போக்கூட்டி றோ.க.த.க.பாடசாலை, கைதடிநுணாவில் அ.த.க.பாடசாலை ஆகியவற்றின் அதிபர் பதவிகளுக்கு இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தோர் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

நியமனம் பெறும் அதிபர்கள் ஆகக் குறைந்தது மூன்று வருடகாலம் அப்பாடசாலையில் கட்டாய சேவையாற்றக்கூடிய வயதெல்லையுடையவராகவும் தற்போது கடமையாற்றும் பாடசாலையில் குறைந்தது 3 வருடங்கள் அதிபராக சேவையாற்றி இருத்தல் வேண்டுமென்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-29)

# அனுமதிப் பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்த நபர் கைது

பருத்தித்துறைப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் மதுபானம் விற்ற சந்தேக நபர் ஒருவரை பருத்தித்துறை சூழல் பாதுகாப்பு பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

மேற்படி சந்தேக நபரின் வீட்டை சுற்றி வளைத்தபோது குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபரை பொலிஸ்பிணையில் விடுவித்து நாளை மறுதினம் திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் பொலிஸார் முற்படுத்தவுள்ளனர். (ஸ்ரீ-3-24)

# இலங்கை வங்கித் தலைவர் இன்று வடமராட்சிக்கு விஜயம்

(பருத்தித்துறை)

இலங்கை வங்கி தலைவர் காமினி விக்கிரமசிங்க இன்று சனிக்கிழமை வடமராட்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவருடன் வங்கி அதிகாரிகள், மத்திய வங்கி அதிகாரி குழு ஒன்றும் விஜயம் செய்யவுள்ளதாக தெரியவருகிறது.

மேற்படி வங்கிக்குழு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்கல்லூரியில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள மீனவர்களுக்கான கடன் வழங்கும் நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-10)

## செயலமர்வு

வடமராட்சி கல்வி வலயத்தில் ஆரம்பப்பிரிவு தரம் 1 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 4 மணிவரை யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரிய வளநிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்கள் தரம் 1 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை எடுத்து வருமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

*****

(அல்வாய்)

யா/மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் க.பொ.த (உ/த) பிரிவில் இணைந்த கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வின்போது இணைந்த கணிதத்திற்கான மாதிரி வினாத்தாள் தயாரிக்கப்படவுள்ளது.

இச்செயலமர்வினை வடக்குமாகாண கல்வித்திணைக்களத்தின் கணித பாட வளவாளர்கள் நடாத்தவுள்ளதாக வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

*****

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளில் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் பொறுப்பான ஆசிரியர்களுக்கான உளசமூக இடையீட்டு நிகழ்ச்சித் திட்ட செயலமர்வு எதிர்வரும் 21,22,23 ஆகிய திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் 4 மணி வரை யா/வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## கடன்கொடுப்பனவு வழங்கலும் கௌரவிப்பு நிகழ்வும்

(நல்லூர்)

இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையினால் அப்பகுதி விவசாயிகளுக்கு சுயதொழில் முயற்சியாளர்களுக்கான கடன் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வும் விவசாய சம்மேளன பிரதிநிதிகள் கௌரவிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு ஆவரங்கால்சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்கி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் இலங்கை வங்கியின் பணிப்பாளர்களும் உயரதிகாரிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

எனவே பயனாளிகள், வாடிக்கையாளர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், மகளிர் குழுக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் த.புவனேந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-134)

யாழ்.செய்திகள்

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு புதிதாக இரண்டு மலசலகூடங்கள் அமைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவிற்கென இரண்டு மலசலகூடங்கள் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

மேற்படி வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவிற்கு வரும் நோயாளர்கள் மலசல கூடமின்றி சிரமங்களை எதிர்நோக்குவதையடுத்து யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப்பணிப்பாளர் வைத்தியசாலைக்கு வருகைதந்து நோயாளர்களுடன் கலந்துரையாடிய பின் மேற்படி மலசலகூடம் அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-29)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இயன்மருத்துவர் இன்மையால் சிரமம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இயன் மருத்துவர் இல்லாமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதன் காரணமாக வன்னிப்பகுதியில் இடம்பெற்ற யுத்த வேளையில் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட பலர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய அவலநிலை உள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் இயன் மருத்துவப் பிரிவு ஆரம்பிக்கும் பட்சத்தில் வன்னிப்பிரதேச மக்களும் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி மற்றும் பூநகரி மக்கள் பயன் பெறமுடியுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-29)







பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கு துரித மீள் எழுச்சி திட்டம் பற்றிய உலக வங்கியின் மீளாய்வுக் கூட்டம் நேற்று யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் வடக்கு துரித மீள் எழுச்சி திட்டப் பணிப்பாளர் எஸ்.எஸ்.சிவகுமார், உலக வங்கி பொது முகாமையாளர் என்.மனோகரன் ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ்.மாவட்ட பிரதேச செயலர்கள் மற்றும் அரச அலுவலர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் எஸ்.கரன்)

# இன்று ஒரு தகவல்

## பதவி மோகம்

ஒருநாள் பத்துப் பதினைந்து பள்ளிக்கூடப் பிள்ளைகள் என்னைத் தேடி வந்தார்கள்.

"உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்திருக்கிறோம்" என்றார்கள்.

"என்ன விடயம் சொல்லுங்களேன்" என்றேன்.

"நாங்களெல்லாம் கூடி ஒரு முடிவு செய்திருக்கிறோம். அதை உங்களிடம் சொல்ல வேண்டும்" என்றான் ஒரு பையன்.

"என்ன முடிவு அது?" என்று கேட்டேன் மிகவும் ஆர்வமாக.

அதை இப்பொழுது சொல்லமாட்டோம். எங்களுக்குப் பிடிக்கிற மாதிரி ஏதாவது ஒரு தகவல் சொன்னால்தான் நாங்கள் அதைச் சொல்வோம்" என்றான் அவன்.

"சரி, சின்ன பையன்களிடம் இன்றைக்கு வசமாக மாட்டிக் கொண்டோம்" என்று நினைத்துக் கொண்டே அவர்களுக்குத் தகுந்தாற்போல் ஒரு கதை சொல்ல ஆரம்பித்தேன்.

ஒரு பெரிய காடு. அதில் பலவிதமான மிருகங்கள். அந்தக் காட்டுக்கு ஒரு சிங்கம் தான் ராஜா. எப்பொழுதுமே காட்டுக்கு அதுதானே ராஜா. ஒரு பெரிய யானைக்கு இது பொறுக்கவில்லை.

"என்ன இது ? எப்பொழுது பார்த்தாலும் இங்கே சிங்கத்துக்கே ராஜா பதவி கிடைக்கிறது? நானெல்லாம் எவ்வளவு பலசாலியாக இருக்கிறேன். அப்படியிருந்தும் எனக்கு அந்தப் பதவி கிடைக்கவில்லையே" என்று தனக்குள்ளே பொருமிக் கொண்டிருந்தது.

ராஜா பதவியை நினைத்து அதற்கு மிகுந்த ஏக்கம். பதவி மோகம்.

இந்தச் சமயம் பார்த்து ஒரு குள்ள நரிக்கூட்டம் அதைத் தேடிக் கொண்டு வந்தது.

"ஐயா, பெரியவரே! நீங்கள் இந்த காட்டுக்கு ராஜாவாக இருக்க ஆசைப்படுகிறீர்கள். அதில் தப்பில்லை.

ஆனால், அதற்கு முன் நீங்கள் எங்கள் கூட்டத்துக்கு சிறிது நாட்கள் ராஜாவாக இருங்களேன். உங்களுக்கும் ஒரு 'ட்ரெயினிங்' கிடைத்தது மாதிரி இருக்குமே" என்றன அந்தக் குள்ள நரிகள்.

இதைக் கேட்டவுடன் யானைககுச் சந்தோஷம் தாளவில்லை. அதுதான் எப்பொழுது பதவி வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறதே.

இருந்தாலும் கொஞ்சம் 'பிகு'பண்ணிக் கொண்டு "நீங்களெல்லாம் இவ்வளவு தூரம் என்னைத் தேடிவந்து கேட்டதால் ... உங்கள் கூட்டத்துக்கு ராஜாவாக இருக்க சம்மதிக்கிறேன்" என்றது. உடனே அந்த யானை ராஜநடைபோட ஆரம்பித்தது. யானை சாதாரணமாக நடந்தாலே எப்படி இருக்கும் என்பது நமக்குத் தெரியும். அதுவே ராஜநடை நடக்க ஆரம்பித்தால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

யானை முன்னால் கம்பீரமாக போய்க் கொண்டிருந்தது. நரிகளெல்லாம் மிகவும் அடக்கமாக அதன் பின்னால் போய்க் கொண்டிருந்தன.

"ராஜா வாழ்க! ராஜா வாழ்க!" என்று கோஷம் எழுப்பிக் கொண்டு போய்க் கொண்டிருந்தன. யானைக்குத் தலைகால் புரியவில்லை. நிமிர்ந்து நடக்க ஆரம்பித்தது.

அப்படிப் போய்க் கொண்டிருந்த போது ஒரு சதுப்பு நிலத்தில் திடீரென்று காலை வைத்து விட்டது. அவ்வளவுதான்! கால் உள்ளே போய்விட்டது. இன்னொருகாலை எடுத்து வைத்தது. அதுவும் உள்ளே போய்விட்டது.

அந்த இரண்டு காலையும் எடுப்பதற்காக அடுத்த இரண்டு காலையும் அழுத்தியது. அதுவும் உள்ளே போய் விட்டது. இப்பொழுது நான்கு கால்களும் உள்ளே போய்விட்டன. எடுக்க முடியவில்லை.

குள்ள நரிகளெல்லாம் அதைச் சுற்றிச் சுற்றி வந்தன.

"தொண்டர்களே! தலைவரான நான் தவித்துக் கொண்டிருப்பது உங்களுடைய கண்ணுக்குத் தெரியவில்லையா? உடனே காப்பாற்றுங்கள்" என்று கத்தியது யானை. குள்ள நரிகளில் ஒன்று முன்னால் வந்து நின்று அந்த யானையைப் பார்த்தது.

"தலைவரே! எங்களுக்கு ரொம்ப நாளாக ஒரு ஆசை. அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்காகத்தான் உங்களை எங்கள் தலைவராக ஏற்றுக் கொள்கிறோம் என்று சொன்னோம்" என்றது.

"என்ன ஆசை?" என்று கேட்டது யானை.

"யானைக்கறி சாப்பிட்டுப் பார்க்கவேண்டும் என்று எங்களுக்கு ஆசை" என்றது அந்த நரி.

இதைக் கேட்டவுடன் அந்த யானை மூர்ச்சையாகிவிட்டது. நரிகளெல்லாம் அதன் மேல் ஏறி குதற ஆரம்பித்துவிட்டது.

பதவி மீது இருந்த பேராசை அந்த பலசாலியான யானையையே மாட்டி விட்டது பார்த்தீர்களா? என்று அந்த சின்னப் பையன்களிடம் சொல்லி முடித்தேன்.

"சரி, இப்ப நாங்க உங்களைத் தேடிவந்த விடயம் என்னவென்பதை சொல்லவா?" என்றான் ஒருவாண்டு.

"சீக்கிரம் சொல் தம்பி. சஸ்பென்ஸ் தாங்கவில்லை" என்றேன்.

அவன் மெதுவாக என்னைப் பார்த்தான்:

"எங்களுக்குக் கொஞ்ச நாள் நீங்கள் தலைவராக இருக்கிறீங்களா?" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வெளிநாட்டு புலமைப் பரிசில் திட்டத்திற்கான நேர்முகப்பரீட்சை

கிளிநொச்சி மாவட்ட இளைஞர்- யுவதிகளை வெளிநாட்டு புலமைப் பரிசில் திட்டத்திற்கு சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9 மணிமுதல் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிளிநொச்சி மாவட்டப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 18 வயதுக்கும் 27 வயதுக்கும் இடைப்பட்ட க.பொ.த.சாதாரதரம் ஆங்கிலத்துடன் சித்தி எய்திய இளைஞர்- யுவதிகள் இந்நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம்.

இளைஞர் கழக அல்லது நிஸ்கோ அங்கத்தவர்களுக்கும் ஆங்கிலத்தில் உரையாடக் கூடியவர்களுக்கும் மற்றும் விளையாட்டு, கலாசாரம், தொழில் நுட்பம் போன்ற துறைகளில் மிளிர்பவர்களுக்கும் புள்ளியடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஓ.கே. குணநாதன் தெரிவித்தார். இந் நேர்முகப் பரீட்சையில் தேர்வு செய்யப்படும் இளைஞர் - யுவதிகள் இவ்வாண்டு வழங்கப்படும் வெளிநாட்டு புலமைப் பரிசில்களுக்கு தகுதி அடிப்படையில் உள்வாங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-9)

# நாட்டின் குளிர்பான நிறுவனங்களை சோதனை செய்யுமாறு பணிப்புரை

நாட்டிலுள்ள குளிர்பான உற்பத்தி நிறுவனங்களை சோதனையிடுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

குளிர்பானம் அருந்தியமையினால் பொலநறுவை அக்கிரடாக என்ற பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமியொருவர் உயிரிழந்துள்ளதோடு அவரின் தாயாரும் கடுமையாக சுகவீனமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை கண்டறியுமாறு அமைச்சர் சுகாதாரத் துறையினருக்கு பணிப்புரை வழங்கியிருக்கின்றார். பொதுச் சுகாதாரப் பிரிவின் அதிகாரிகளை ஈடுபடுத்தி குளிர்பான உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் அவற்றை விற்பனை செய்யும் நிலையங்களை சோதனை இடுமாறு அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார். (2-9)

# பாரம்பரிய வைத்தியத்திற்கான தேசிய வைத்திய நிறுவனத்தின் தகவல் திரட்டும் நிகழ்வு

வடமாகாண சுதேச மருத்துவப் பகுதியின் ஆயுர்வேத மருந்து உத்தியோகத்தர்கள், பொது சுகாதார ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள், பொது சுகாதார ஆயுர் வேத மருத்துவ உத்தியோக உதவியாளர்கள், பாரம்பரிய வைத்தியர்கள், வைத்தியத்துறைசார் ஏனைய உத்தியோகத்தர்கள் சார்பான மாவட்ட ரீதியான தகவல் சேகரிப்பு கலந்துரையாடல் நேற்று ஆரம்பமானது. இந்நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது. இதற்கமைய இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி அரசு ஆயுர்வேத வைத்திய சாலையிலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 .30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையிலும் (முல்லைத்தீவு பிரதேச வைத்தியர்களும் கலந்து கொள்வர்) இடம்பெறவுள்ளது.

எனவே இக் கலந்துரையாடலில் சகல ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் வைத்தியர்கள், பரம்பரை வைத்தியர்கள், ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள், பொது சுகாதார ஆயுர்வேத மருத்துவ உத்தியோக உதவியாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாரம்பரிய வைத்தியத்திற்கான தேசிய வைத்திய நிறுவனத்தின் (NITM) பணிப்பாளர் ஹெமந்த கமகே அறிவித்துள்ளதாக வட மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் டாக்டர் திருமதி. து.துரைரட்ணம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 240 | 230 |
| உருளைக்கிழங்கு | 45 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 230 | 300 | 300 | 250 |
| தக்காளி | 130 | 200 | 240 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 90 | 80 | 100 | 100 |
| கரட் | 100 | 120 | 160 | 120 |
| பூசணி | 50 | 60 | 80 | 50 |
| புடோல் | 70 | 90 | 140 | 90 |
| வாழைக்காய் | 40-50 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 200 | 210 |
| பெரிய வெங்காயம் | 45 | 70 | 80-100 | 70 |
| பாகற்காய் | 100 | 130 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 100-110 | 130 | 200 | 170 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 150 | 200 | 200 | 210 |
| லீக்ஸ் | 110 | 140 | 180 | 130 |
| பீற்றூட் | -- | 120 | 140 | 120 |
| கறிமிளகாய் | -- | 250 | 240 | 230 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 130 | 140 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | -- | 150 | 200 | 160 |
| கீரை - 1 பிடி | 15-20 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 30-40 | 50 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 55 |

# இராசி பலன்

*19.02.2011*
*(மாசி 07, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு*
*பிரதமை பிற்பகல் 12.35 மணிவரை*
*பூரம் பின்னிரவு 2.42 மணிவரை*
*இராகு காலம் 9.32-11.02 மணிவரை*
*சுபநேரம் 3.32-5.02 மணிவரை*

**மேடம்** புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சி வெற்றி தரும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் சிறு ஆதாயம் கிடைக்கலாம்.

**இடபம்** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்தி வந்து சேரலாம், பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், விருந்தினர் வருகையுண்டு.

**மிதுனம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு கிடைக்கலாம், கோயில் திருப்பணிகளில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**கடகம்** நன்மைகள் நடைபெறும் நாள், தொழிலில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, பெருமையடையும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம்.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒழிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி** வெளியூர் பயணங்களால் அலைச்சல் காணப்பட்டாலும் சிறு ஆதாயமும் கிடைக்கலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவான நிலையுண்டு.

**துலாம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றகரமாக அமையும், எதிர்கால வெற்றிக்கு திருப்பு முனையான நாள், புகழ் கூடும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பயணங்களால் பலன் கிடைக்கும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**தனுசு** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், கணவர்- மனைவியிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும், மனக்கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வீர்கள்.

**மகரம்** சிலர் பாராட்டுவது போன்று உங்களை விமர்ச்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதப்படலாம், அலைச்சல் அதிகரிக்கும்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை உருவாகும், செல்வாக்கான நாள், பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்** சச்சரவைவிட்டு சாதித்துக் காட்டும் நாள், தொழிலில் கூடிய ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், தேகாரோக்கியம் புத்துணர்வு பெறும்.

வளவன்

# தமிழக மீனவர் பிரச்சினை குறித்து பிரதமர் நேரடியாக தலையிட வேண்டும்

## ஜெயலலிதா தெரிவிப்பு



(சென்னை)

தமிழக மீனவர் மீதான இலங்கை கடற்படையினர் தாக்குதல்களைத்தடுத்து நிறுத்த இப் பிரச்சினையில் பிரதமர் மன்மோகன் சிங் நேரடியாகத் தலையிட வேண்டும் என்று அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கைக் கடற் படையின் மனிதாபிமானமற்ற தாக்குதல்கள் காரணமாக இது வரை சுமார் 540 தமிழக மீனவர்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 15 நாட்களுக்கு முன்பு கூட ஒரு மீனவரின் உயிரை இலங்கை கடற்படை பலி வாங்கியது.

அப்போது கனிமொழி மௌனமாகத் தான் இருந்தார். இந்த நிலையில் இப்போது திடீரென இலங்கை தூதரகத்துக்கு எதிராக கனிமொழி ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளார்.

இது ஒரு கபட நாடகம். ஒரு இலட்சத்து 80 ஆயிரம் கோடி 2 ஜி அலைக்கற்றை ஊழல் தொடர்பாக கனிமொழி கைது செய்யப்படுவார் என்று யூகத்தின் அடிப்படையில் தொடர்ந்து செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் மீனவர்கள் நலனில் தி.மு.கவுக்கு அக்கறை இருப்பதைப்போல காட்டுவதற்கு இந்த ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவது குறித்து வெளியுறவுத்துறை செயலர் நிருபமாராவ் மூலம் அரசுக்கு இந்தியா கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தது.

எனினும் ஒருவார காலத்துக்குள் நூற்றுக்கு மேற்பட்ட தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். கடந்த 16 ஆம் திகதி அன்று மீண்டும் இந்திய மீன்பிடி படகுகளைத் தாக்கி அதன் மீது பெற்றோல் குண்டுகளை வீசி 24 மீனவர்களைஇலங்கை கடற்படை பிடித்து வைத்துள்ளது.

முதல்வர் கருணாநிதியால் அனுப்பப்படும் கடிதங்களை ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு கண்டு கொள்வதில்லை என்பது வரிசையாக நடக்கும் நிகழ்வுகளைப் பார்க்கும் போது தெளிவாகிறது.

எனவே கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்தியாவின் கடல் எல்லையை தனது முன்னைய நிலைக்கு எடுத்து வரும் வகையில் இந்தியா வரைபடத்தில் கச்சதீவை மீண்டும் சேர்க்க வேண்டும். எனவே இலங்கை அரசுடனான கச்சதீவு உடன் படிக்கை இரத்து செய்யப்பட வேண்டும்.

மேலும் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் இந்தியாவின் கடற்படை கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட வேண்டும். இந்திய மீனவர்களுக்கு எதிரான தாக்குதல் உடனடியாக நிறுத்தப்படவில்லை என்றால் கடுமையான விளைவுகளை இலங்கை சந்திக்க நேரிடும் என்று இலங்கை ஜனாதிபதியிடம் பிரதமர் மன்மோகன் சிங் தொலைபேசி மூலம் பேசி நேரடியாக எச்சரிக்க வேண்டும் என்று ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)




## மீனவர்களுக்கு ஆதரவாக களமிறங்குகிறார் விஜய்

(சென்னை)

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை சிறைப்பிடித்ததைக் கண்டித்து நடிகர் விஜயின் மக்கள் இயக்கம் சார்பில் எதிர்வரும் 22ஆம் திகதி நாகப்பட்டினத்தில் பொதுக் கூட்டம் இடம் பெறுகிறது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்னதாக நடத்தப்படும் இந்த பொதுக்கூட்டம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

நடிகர் விஜயின் அரசியல் பிரவேசத்தின் முதல் படியாக இந்தக் கூட்டம் இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற வேதாரண்யம் மீனவர் ஜெயக்குமாரை இலங்கைக் கடற்படையினர் கயிற்றால் இறுக்கி கொலை செய்தனர். இந்த விவகாரம் தமிழகம் முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து நாகை, காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த 112 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கடந்த 15ஆம் திகதி சிறை பிடிக்கப்பட்டனர். தொடர்ந்து புதுக்கோட்டை கோட்டைப்பட்டினத்திலிருந்து சென்ற 24 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர். இதனைக் கண்டித்து தி.மு.க.,பாஜக. இளைஞர் காங்கிரஸ் சார்பில் மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நடிகர் விஜய் மீனவர்களுக்கு ஆதரவாக நாகையில் பொதுக்கூட்டம் நடத்த முடிவு செய்துள்ளார். விஜயின் மக்கள் இயக்கம் சார்பில் நடக்கும் இந்தக் கூட்டத்தில் மீனவர்களுக்கு எதிரான இலங்கை அரசின் போக்கைக் கண்டித்து அவர் பேசுகிறார்.

நாகப்பட்டினம் வி.டி.பி.கல்லூரி வளாகத்தில் இந்த பொதுக்கூட்டம் வரும் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நடக்கிறது. இதில் விஜயின் தந்தையும் திரைப்பட இயக்குநருமான எஸ்.ஏ.சந்திரசேகரன் உள்ளிட்ட விஜய் மக்கள் இயக்கத்தின் மாவட்ட, மாநில நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

மாநிலம் முழுவதிலும் இருந்து ரசிகர்கள் பெருமளவில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

### விஜய் அரசியல் பிரவேசம்?

இரண்டு ஆண்டுகளுக்கு முன் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தியுடனான சந்திப்புக்குப் பின்னர் விஜயின் அரசியல் பிரவேசம் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வந்தன.

அதைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக விஜய் சென்னையில் கடந்த ஆண்டு உண்ணாவிரதம் இருந்தார். அதில் இலங்கை அரசுக்கு எதிரான அவரது பேச்சு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது.

அதன்பின் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக ஆர்ப்பாட்டங்களோ கண்டனப் பொதுக் கூட்டங்களோ விஜய் தரப்பில் நடத்தப்படவில்லை.

இந்நிலையில் விஜயின் அரசியல் பிரவேசம் பற்றி முன்பை விட இப்போது அவரது ரசிகர்களிடம் எதிர்பார்ப்பு அதிகமாகவுள்ளது.

அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுடன் விஜய் தந்தை சந்திரசேகரனின் அடுத்தடுத்த சந்திப்புக்கள் ஆளும் கட்சி தரப்பைச் சாடும் வகையிலான விஜயின் சமீபத்திய பேட்டிகள் அவரது அரசியல் பிரவேசத்தை உறுதிப்படுத்துகின்றன.



விஜயின் நாகை பொதுக்கூட்டம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அவரது அரசியல் பிரவேசத்துக்கு வழி வகுக்கும் எனவும் கருதப்படுகிறது.

(ஸ்ரீ-2)

## திருவனந்தபுரத்தில் வான் ஆற்றில் வீழ்ந்ததில் ஐந்து குழந்தைகள் பலி

திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் காலை ஆற்றில் பாடசாலை வான் கவிழ்ந்ததில் 5 குழந்தைகள் உட்பட 6 பேர் பலியானார்கள்.

திருவனந்தபுரம் சாக்கை கரிக்ககம் சாமுண்டி கோவில் அருகே அந்த பகுதியைச் சேர்ந்த 12 குழந்தைகளை ஏற்றிக்கொண்டு பாடசாலை வான் நேற்று முன்தினம் காலை புறப்பட்டுச் சென்றது.

ஆற்றங்கரையில் சென்று கொண்டு இருந்தபோது எதிரே வந்த ஒரு வாகனம் வான் மீது மோதியது.

இதில் வான் நிலை தடுமாறி ஆற்றுக்குள் கவிழ்ந்தது. இதனால் வானில் இருந்த குழந்தைகள் பயத்தில் காப்பாற்றுங்கள்,காப்பாற்றுங்கள் என கூச்சலிட்டனர்.

அக்கம்பக்கத்தினர் அங்கு திரண்டு அவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். அதற்குள் தண்ணீரில் மூழ்கி 5 குழந்தைகளும் அழைத்துச்சென்ற பராமரிப்பாளரும் ஒருவரும் பலியானார்கள். மற்றைய குழந்தைகள் மீட்கப்பட்டு திருவனந்தபுரம் அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (2)

## இலங்கை மாணவர்களைத் தாக்கி தங்கச் சங்கிலி பறிமுதல்

சென்னையில் இலங்கை மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளதுடன அவர்கள் அணிந்திருந்த பெறுமதியான தங்கச் சங்கிலியும் பறிக்கப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண மாணவர்கள் இருவர் அண்மையில் சென்னையிலுள்ள உறவினர் வீட்டுக்கு சென்றிருந்தனர். அதன் பின் அவர்கள் ராயப்பேட்டையிலுள்ள திரையரங்கொன்றில் சினிமா பார்ப்பதற்காகச் சென்றிருந்த வேளையிலேயே அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரையரங்கு ஊழியர்களும் பொலிஸாரும் இணைந்து தங்களைத் தாக்கியதாகவும் எண்பதாயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியும் முப்பத்தி ஐயாயிரம் ரூபா பெறுமதியான கைத் தொலைபேசி என்பவற்றை தங்களிடமிருந்து அபகரித்துக் கொண்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயினும் அதனை மறுக்கும் பொலிஸார் பிரஸ்தாப மாணவர்கள் இருவரும் குடிபோதையில் திரையரங்கில் ரகளையில் ஈடுபட்டதால் படம் பார்க்க நிர்வாகத்தினர் அனுமதிக்கவில்லை என்றும் மற்றபடி பொலிஸார் அங்கு செல்வதற்கு முன்பே அவர்கள் அந்த இடத்திலிருந்து சென்று விட்டிருந்ததாகவும் தெரிவிக்கின்றனர். (2)

# மாசி மாத இராசி பலன்கள்




(மூலம், பூராடம், உத்ராடம் 1ஆம் பாதம் வரை)

**ஆரோக்கியத்தில் கவனம் தேவை எதிர்ப்புக்களை எளிதில் சமாளிக்கும் ஆற்றலைப்பெற்ற தனுசு ராசி நேயர்களே!**

விருந்தினரை வரவேற்பதில் உங்களுக்கு இணையாருமில்லை. வேற்று மனிதர்களாக இருந்தாலும், விரைவில் பழகிவிடுவீர்கள். மாற்றுக் குணமுடையோர் உங்கள் பக்கத்தில் இருந்தால் மறுநிமிடமே மாறிவிடுவர். 'பதறாத காரியம் சிதறாது' என்பதற்கு ஏற்ப எதையும் பதறாமல் செய்வீர்கள். பாராட்டுப்பெறுவது ஒன்றே உங்கள் இலட்சியமாக இருக்கும்.

உங்களுக்கு இந்த மாசிமாதம் வாழ்க்கைத்தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும் மாதமாக அமையப் போகிறது. வருமானம் திருப்திகரமாக இருக்கும். ஆனால் ஜென்மத்தில் இருக்கும் ராகு சிறுசிறு உடல் உபாதைகளைக் கொடுக்கலாம். வாகனங்களில் பயணம் செய்யும் நீங்கள் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது.

தேகநலனில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளும் மாதமாக இம்மாதம் அமைந்தாலும் எதற்கும் கவலைப் படத்தேவையில்லை. சிக்கனத்தை இதுவரை கையாண்டுவந்த நீங்கள் இனி சேமிப்பை செலவு செய்ய திட்டமிடுவீர்கள். பக்கபலமாக இருக்கும் நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கவேண்டுமானாலும் பாம்புக்கிரகங்களுக்குரிய தலங்களுக்குச் சென்று பரிகாரங்களை செய்துவருவது நல்லது.

5, 12க்கு அதிபதியான செவ்வாய் பெப்ரவரி 13ஆம் திகதி கும்பராசியில் சஞ்சரிக்கப்போகிறார். இதன்விளைவாக பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் உருவாகலாம். அதன் கல்வி முன்னேற்றம் கருதியும், கல்யாண வாய்ப்புக் கருதியும், ஒரு தொகையைச் செலவிட வேண்டிய சூழ்நிலை உருவாகும். அதேநேரத்தில் புத-ஆதித்ய யோகம் இருப்பதால், எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. ஒரு தொகை செலவழிந்த பிறகு அடுத்த தொகை தானாகவே வந்து சேரும். இடம், பூமியை விற்ற கவலை நீங்கும் விதத்தில் புதிய சொத்துக்கள் சேரும்.

பெப்ரவரி 25ஆம் திகதி மகரத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக வெளிநாட்டு அனுகூலம் கிடைக்கும். விரும்பும் விதத்தில் இளைய சகோதரத்தின் ஒத்துழைப்பும் வந்து சேரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு ஊதிய உயர்வும், உத்யோக உயர்வும் எதிர்பார்த்தபடி அமையும். கொடுக்கல்-வாங்கல்கள் சீராகும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அரிய வாய்ப்புகள் வந்து சேரும்.

மார்ச் 2ஆம் திகதி மீன ராசியில் புதன் நீச்சம் பெறப் போகிறார். அது மிகுந்த நற்பலன்களை வழங்கும். 7, 10க்கு அதிபதி நீச்சம் பெறுவதால், இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். கல்யாணக் கனவுகள் நனவாக நாட்டுப்பற்று மிக்கவர்களின் நல்லாதரவோடு உங்கள் கூட்டு முயற்சியில் லாபம் கிடைக்கும். பிரிந்தவர்கள் வந்திணைவர். தாய்வழி ஆதரவு கூடும். வீடு வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டினால் விரைவில் நிறைவேறும்.

இம்மாதம் ஜென்ம ராகு பலம் பெறுவதால் வடக்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வாழ்வில் வளம் காணுங்கள். வாய்ப்பிருக்கும் போது சர்ப்ப சாந்தி செய்வது நல்லது.

**சிவல்புரி சிங்காரம்**

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் அனைவரிடமும் அனுசரித்துச் செல்ல வேண்டிய மாதமாக அமையப்போகிறது. அஷ்டமாதிபதி உச்சம் பெற்று மாதம் தொடங்குவதால் மற்றவர்களிடம் ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்துசேரும். எதையும் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை கேட்டுச் செய்வது நல்லது. கணவன்-மனைவியரிடையே விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் ஒற்றுமையைப் பலப்படுத்திக் கொள்ளலாம். குலதெய்வ வழிபாட்டில் கூடுதல் கவனம் செலுத்துவதற்கு வார வழிபாடாக தென்முகக் கடவுளை வழிபடுவது நல்லது. மாதக்கடைசியில் இடமாற்றங்கள், ஊர்மாற்றங்கள் ஒருசிலருக்கு உருவாகும்.




(உத்ராடம் 2, 3, 4 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 பாதம் வரை)

**நிதானத்துடன் செயல்பட்டால் நிம்மதி**

**குணத்தோடு வாழ்வதைக் காட்டிலும், பணத்தோடு வாழ வேண்டுமென்று எண்ணும் மகர ராசி நேயர்களே!**

எதையும் ஒருமுறைக்குப் பல முறை யோசித்துச் செய்பவர்கள் நீங்கள். ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன்னால் அதில் ஈடுபடுவதன் மூலம் என்ன கிடைக்கும் என்பதை தெரிந்து கொள்வதில் பிரியப்படுவீர்கள். இறைநம்பிக்கை உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். நண்பர்களை நம்பிச் செயல்படுவதில் கொஞ்சம் கூட யோசிக்க மாட்டீர்கள். ஏமாற்றம் வரும் பொழுது, 'எல்லாம் நேரம் தான் காரணம்' என்பதை ஒத்துக் கொள்வீர்கள்.

உங்களுக்கு இந்த மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, விரய ஸ்தானத்தில் செயல் ஸ்தானாதிபதி வீற்றிருப்பதால் வரவைக் காட்டிலும் செலவு கூடும் என்றே சொல்ல வேண்டும். சனி வக்ரம் பெறுகிறார். எனவே உடல் ஆரோக்கியத்திலும் அதிக கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகும். ஆகாரத்தில் அதிகக் கட்டுப்பாடு செலுத்த வேண்டிய மாதம் இது. நோய் வருவதற்கான அறிகுறி தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது.

வாக்கு ஸ்தானத்தில் அஷ்டமாதிபதி சூரியன் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா என்பது சந்தேகம்தான். கொள்கைப்பிடிப்பை ஒருசில சமயங்களில் தளர்த்திக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். குடும்பத்திலும் சரி, வெளிவட்டாரப் பழக்க வழக்கத்திலும் சரி அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் கிடைக்கும். ஒன்பதாம் இடத்தில் சனி வக்ரம் பெறுவதால் குடும்பம் பெரியவர்களின் உடல்நலம் பாதிக்கப்படலாம். எனவே சனி வழிபாட்டை முறையாகச் செய்வதால் சஞ்சலங்களில் இருந்து விடுபட இயலும்.

பெப்ரவரி 13ஆம் திகதி கும்ப ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாகத் தொழிலில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். வாங்கிய கடன்களைக் கொடுத்து மகிழ்வீர்கள். வீடு கட்ட வேண்டும் அல்லது வாங்க வேண்டும் என்று பல நாட்களாக நினைத்த எண்ணம் ஈடேறும். தாய் வழியில் ஏற்பட்ட விரிசல் அகலும். இதுவரை இடையூறு செய்த இளைய சகோதரம் ஒத்து வருவார்.

பெப்ரவரி 25ஆம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். ஜென்ம ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கும் பொழுது நற்பலன்களே உங்களுக்கு வந்து சேரும். 5, 10 க்கு அதிபதியாக சுக்ரன் விளங்குவதால், பிள்ளைகள் வழியில் வேலைக்காகவும், தொழிலுக்காகவும் எடுத்த முயற்சி வெற்றி தரும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக எடுத்த முடிவுகளில் வெற்றி கிடைக்கும். கல்யாண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

உங்கள் இராசிக்கு 6, 9க்கு அதிபதியான புதன் மார்ச் 2 ஆம் திகதி மீன ராசியில் நீச்சம் பெறுகிறார். இதன் விளைவாகத் தந்தை வழியில் வீண் விரயங்களும், பிரச்சினைகளும் உருவாகலாம். உடன் பிறப்புக்கள் உங்களை விட்டு விலகிச் செல்லாமல் இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தியோகத்திலும் உடன் இருப்பவரை அனுசரித்துச் செல்வது பலன் தரும்.

இம் மாதம் விரய ஸ்தானத்தில் ராகுவும், 6 இல் கேதுவும் இருப்பதால் சர்ப்ப கிரகத்திற்குரிய வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. குறிப்பாக பெண் தெய்வ வழிபாடுகள் பெருமை சேர்க்கும். வக்ரச்சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஒவ்வொரு சனிக்கிழமையும் விரத மிருந்து, சனீஸ்வரருக்கு எள்தீபம் ஏற்றி வழிபட்டு வருவது நல்லது. சனிக்குரிய சிறப்பு தலங்களுக்கும் சென்று வழிபட்டு வந்தால் இனிக்கும் சம்பவங்கள் இயல்பாகவே நடைபெறும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய மாதமாக அமைகிறது. தேவையற்ற கோபங்களைக் குறைத்துக் கொள்வது நல்லது. பெற்றோர் வழியில் பிரச்சினைகளும், திடீர் விரயங்களும் உருவாகலாம். வாக்கு ஸ்தானத்தில் அஷ்டமாதிபதி சஞ்சரிப்பதால் பக்கத்து வீடு, எதிர்வீட்டில் பகை வராமல் பார்த்துக் கொள்வது நல்லது. குடும்ப பெரியவர்களின் அனுசரிப்பால் குழப்பங்களைத் தீர்த்துக் கொள்ளலாம். உத்யோகத்தில் உள்ளவர்கள் உடன் இருப்பவர்களைச் சார்ந்திருக்கும் சூழ்நிலையே உருவாகும். கணவன்-மனைவிக்குள் கருத்து ஒற்றுமை ஏற்பட, விட்டுக் கொடுத்துச் செல்வதே நல்லது.





இனுவில் மக்ளோட் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு 113 ஆண்டுகள் நிறைவு பெறுவதை நினைவு கோருமுகமாக தென்னிந்திய திருச்சபையின் போதகர் ஆராதனை நடத்துவதையும் தேவனுக்கு நன்றி தெரிவிக்கும் ஆராதனை வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெறுவதையும் இப்படங்களில் காணலாம்.
(படங்கள்:எஸ்.கதிரவேலு)

# பொதுநலவாய நாடுகளின் விளையாட்டிற்கு அரசினால் பெரும் தொகைப் பணம் விரயம்

## ரவி கருணாநாயக்க எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கம் பெரும் தொகைப் பணத்தை விரயம் செய்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

விளையாட்டுப்போட்டி தொடர்பான பிரசாரங்களை மேற்கொள்ளும் நிறுவனம் ஒன்றுக்காக அரசாங்கம் 454 மில்லியன் ரூபாவினை வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் அவதியுறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுப்போட்டிகளைப் பெற்றுக்கொள்வதற்காக 36 வங்கி பிணையாளர்கள் பரிந்துரை செய்யப்பட வேண்டும் என்ற போதிலும் இதுவரையில் 12 பிணையாளர் களே பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

பிரசாரப் பணிகளுக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் 785 ரூபாவிற்கு கொள்வனவு செய்ய முடிந்த ஒரு கூடை உணவுப் பொருட்களுக்காக தற்போது 2 ஆயிரத்து 702 ரூபா செலவிட வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



## பரிசளிப்பு விழா

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு பாடசாலையின் அதிபர் சண்.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருந்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தான சிறப்பு விருந்தினராக நல்லூர் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரின், பாராளுமன்ற குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் , யாழ்.மாநகர முதல்வர் திருமதி ப.யோகேஸ்வரி , ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ.இரவீந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மானிக்கராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-9)

## திருமலையில் சுவர் இடிந்து வீழ்ந்து கடற்படை வீரர் பலி

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் கடற்படை பயிற்சிமுகாமைச் சேர்ந்த கடற்படை வீரர் ஒருவர் பழைய சுவரொன்று இடிந்து விழுந்ததால் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

குருநாகலைச் சேர்ந்த கிஷான் குணவர்தன (வயது 19) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். இது தொடர்பான விசாரணைகளை மூதூர் பதில் நீதவான் மஹ்ரூப் மேற்கொண்டார்.

பலியான கடற்படை வீரரின் சடலம் திருமலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அது தொடர்பிலான விசாரணையை திருகோணமலை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஸ்ரீ-2)

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் செக் குடியரசுக்கு விஜயம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க செக் குடியரசுகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் கூட்டத் தொடரில் கலந்துகொள்ளும் நோக்கில் ரணில் விக்கிரமசிங்க செக் குடியரசுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதற்காக எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரையில் சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் அமர்வுகள் நடைபெறவுள்ளன.

சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் தலைவராக செக் குடியரசுகளின் பிரதமர் பீட்டர் நெக்காஸ் பதவி வகிப்பதுடன் அதன் துணைத் தலைவராக ரணில் விக்ரமசிங்க கடமையாற்றி வருகின்றார். (ஸ்ரீ-2)


# இலங்கை பொலிஸ்

# பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு

*கீழ்வரும் பதவிக்கட்காக திருமணமாகாத இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன*

| பதவிகள் | அடிப்படை தகைமைகள் |
|---|---|
| உப பொலிஸ் பரிசோதகர் | வயதெல்லை:- 18-28 வயதிற்குள் உயரம் 05 அடி-06 அங்குலம் மார்பு 32 அங்குலம்<br>கல்வி -க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மற்றும் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியெய்திருக்கவும் வேண்டும். |
| பெண் உப பொலிஸ் பரிசோதகர் | வயதெல்லை:- 18-28 வயதிற்குள் உயரம் 05 அடி-04 அங்குலம்.<br>கல்வி- க.பொ.த. (சா.த) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மற்றும் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியெய்திருக்கவும் வேண்டும். |
| பொலிஸ் கொஸ்தாபல் | வயதெல்லை:- 18-28 வயதிற்குள் உயரம் 05 அடி -04 அங்குலம் மார்பு-30 அங்குலம்<br>கல்வி-க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவையில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| பெண் பொலிஸ் கொஸ்தாபல் | வயதெல்லை:- 18-28 வயதிற்குள் உயரம் 05 அடி-02 அங்குலம்<br>கல்வி-க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவையில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| பொலிஸ் கொஸ்தாபல் சாரதி | வயதெல்லை:- 19-28 வயதிற்குள் உயரம் 05 அடி 03 அங்குலம் மார்பு 30 அங்குலம்<br>கல்வி- க.பொ.த.(சா/த) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவையில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். வாகனம் ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழைப் பெற்றபின் ஆகக் குறைந்தது 01 வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |

மேலதிக தகவல்களுக்கு 24.12.2010 ஆம் திகதிய அரச வர்த்தமானி இலக்கம் 1686 ஐ பார்க்கவும்
மேல் குறிப்பிட்ட பதவிகளுக்கான ஆரம்ப உடற்தகுதிகாண் மற்றும் எழுத்துப்பரீட்சைகள் யாவும் அறிவித்த திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்ட இடங்களில் நடைபெறும்.
யாழ்ப்பாணம் , வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, அனுராதபுரம், கண்டி, குருநாகல் , பதுளை, மாத்தறை மற்றும் கொழும்பு.

*விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி:-25.02.2011*

மேலதிக விபரங்களுக்கு:-011-2552736, 011-2552861, 011-2585524, 011-2552953 இணையத்தளம் :-www.police.lk

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி**


பணிப்பாளர்.
பொலிஸ் ஆட்சேர்ப்பு காரியாலயம்,
இல.375 ஹெவலக் ரோட்,
கொழும்பு-06.

பொலிஸ் மா அதிபர்.

# கள்ளிக்காட்டு இதிகாசம்

44





கவிப்பேரரசு வைரமுத்து

எறும்புக்குப் பாதம் பாத்திரலாம் போலிருக்கு-இவளப் பாக்கிறதுதான் பெரும் பாடா இருக்கு.

போகையிலயும் வரயிலயும் கத்திச் சத்தம் கேக்குது; கத்திரிச் சத்தம் கேக்குது... ஒரு 'ஜல் ஜல்' கேக்கலையே! 'சரக் சரக்' கேக்கலையே! தெனம் தெனம் போய்ச் சவரம் பண்ணிக்கிட்டா என்ன? சே! வேணாம். சந்தேகப்படுவாக.

ஒரு மார்கழி மாசம். வெட வெடன்னு நடுங்கிற விடிகாலை. வெள்ளச்சீலபோட்டு யாரோ திரைகட்ன மாதிரி ஊர மூடி நிக்குது பனி மூட்டம். ஒரு நொண்டி ஆடு புடிச்சுப் போயிக்கிட்டிருந்தாரு பேயத்தேவரு. கஞ்சிப் பொழுதுக்கு மாடோட்டிப் போறதுக்குள்ள நொண்டியாட்ட மேச்சு வீட்ல கட்டிட்டு போயிடணுங்கிறது பெரிய தேவர் உத்தரவு.

கடும் பனி. கை காலெல்லாம் சிலசிலுங்குது. கடகடன்னு தந்தியடிக்கிற பல்லெல்லாம் ஒண்ணோட ஒண்ணு கிட்டிச்சுக்கிருச்சு. முருகாயி வீட்டு மேல ஒரு கண்ண எறிஞ்சு அவளக் காணலென்னு தெரிஞ்சதும் கழுத்தத் திருப்பிக்கிட்டு சன்னாசியப்பன் கோயில் கடந்தா- அங்க நாலஞ்சு சின்னஞ்சிறுசுக குப்பகூளம் கொளுத்திக் கூதக் காஞ்சுக்கிட்டிருக்குதுக.

கையுங்காலும் நடுநடுங்குதா-நொண்டி ஆட்ட சன்னாசியப்பன் கோயிலு வில்வ மரத்துல கட்டிவச்சுப்புட்டு, பேயத்தேவரும் கூதக்காயிற சோதியில கலந்துக்கிட்டாரு.

"ஏ தள்ளுங்கடா. பெரிய மனுசன் வந்தா வழிவிட வேணாமா?" கூதக்காயும் வட்ட வரிசையில் அதட்டி இடம்பிடித்துக் கொண்டார்.

தீப்புடிச்சிருமோ என்னமோன்னு பாவாடைய 'எல்லை' வரைக்கும் தெரட்டித் தெரட்டிக் குத்தவச்சு ஒக்காந்திருந்தா ஒரு கொழந்தப் பொண்ணு. அந்த அழுக்குப் பாவாடைய எரிக்கிற சக்தி அக்கினி பகவானுக்கே இல்லேங்கிற சேதி அவளுக்குத் தெரியாது பாவம்.

பேயத்தேவர் உள்ளங்கையை நெருப்புக் கொழுந்தில் வாட்டிக் கதகதவென்று கன்னத்தில் தேய்த்துக் கொண்டார். செடி செத்தையெல்லாம் எரிந்து தீர்ந்து நெருப்புக் கொழுந்து உள்வாங்கும் நேரம் கூதக்காயும் தன் பங்குக்கான செடி செத்தைகளை மார்போடு அணைத்துக் கொண்டு குபுக்கென்று நெருப்பில் போட்டு நிமிர்ந்த முருகாயி பேயத் தேவரைக் கண்டதும் பேச்சு மூச்சில்லாமல் போனாள்.

யாத்தே! வந்துட்டியாடியம்மா! ஒன்னத்தான்டி தேடி உசுரு அலையா அலையுது!

குப்பை கூளங்களிலிருந்த கசடுகளெல்லாம் பொசு பொசு வென்று புகையாகிப் பனி மூட்டத்தோட கலக்க-கொஞ்ச நேரத்தில் குபுக்கென்று பற்றிக் கொண்ட கொழுந்து நெருப்பின் வெளிச்சத்தில் முகம்பாத்து மூக்குவிட்டுக் கொண்டன, ஒண்ண ஒண்ணு தேடி அலைஞ்ச உசுருக ரெண்டும்.

என்னத்தப் பேசுவாரு இவரு? எதப் பேசுவா அவ? அவ கண்ணுல காதல் ஒழுகுதுன்னு மட்டும் தெரியுது அவருக்கு. அவரு ஒதட்டுல உசுரு துடிக்குதுன்னு மட்டும் தெரியுது அவளுக்கு.

சின்னஞ்சிறுசுக குப்ப கூளங்களக் கிண்டிக் கிண்டி எரிய வச்சுக்கிட்டேயிருக்குதுக. பெரிய சீவனுக ரெண்டும் ஒண்ண ஒண்ணு பாத்துக்கிட்டே ஒக்காந்திருக்குதுக.

"ஏய்! ஏம்பங்குக்குக் குப்பகூளம் கொண்டுவந்து கொட்டுனேன்ல்ல... ஒங்க பங்குக்கு நீங்க போயி செடிசெத்த அரிச்சுட்டு வாங்க. போங்க! போங்க! போங்க!" முருகாயி திட்டம் போட்டு வெரட்டி விடுறான்னு தெரியாம ஆளுக்கொரு பக்கம் ஓடிப்போனதுக சின்னஞ் சிறுசுக.

சட்டப்படி ஒத்த ஆளா இருக்கிறதுதான் தனிமைங்கிறது. ஆனா பிரியம்ன்னு வந்துட்டா ரெண்டு பேரா இருக்கிறதும் தனிமைதான். அது உண்டான தனிமையாத் தெரியல- உண்டாக்கப்பட்ட தனிமையாத்தான் தெரிஞ்சது பேயத்தேவருக்கு.

எதுக்க எதுக்க ஒக்காந்துக்கிட்டு நாலு கையி நெருப்பை நோக்கி நீள நீள, கைகளுக்கு மத்தியில இடைவெளி குறையக்குறைய- தொடலாமா வேணாமான்னு துடிச்சுத் துடிச்சு நெருப்பு தானா எரிஞ்சு தானா அடங்குறமாதிரி தானாத் தவிச்சுத் தானா அடங்கித் தனித் தனியாப் பிரிஞ்சாக ரெண்டு பேரும். ஆனாலும் கூதக்காஞ்ச நெருப்பு மட்டும்தான அணைய முடியும்? உள்நெருப்பு...?

ஒருநாள் கடலக்காட்டுக்குக் காவலுக்கு இருந்தப்ப கள்ளிப் பாறையில சூராம் புதருக்கு அடியில ஒரு காடை கூடு கட்டியிருந்ததைப் பாத்தாரு பேயத்தேவர். கூட்டுக்குள்ள வெள்ளப் பளிங்காங்குண்டுக மாதிரி முழிமுழின்னு முழிச்சுக்கிட்டிருந்ததுக முட்டைக ரெண்டு. பொழுதுசாய 'காச்' 'மூச்'சுன்னு கத்தி வந்திருச்சு காடை. அது கூட்டுல அடையவும் பொத்துனாப்புல வந்து தலையில கட்ன துண்ட விசுக்குன்னு அவுத்து வீசிப் பொசுக்குன்னு பொத்திப் புடிச்சுப்புட்டாரு பேயத்தேவரு. ஒரு கத்தாழநார்ல காடையக் கட்டித் தோள்ல தொங்கவிட்டு மாட்ட ஓட்டி நடந்துட்டாரு வீட்டுக்கு.

"என்னியக் கொல்லப்போறயா? என்னியக் கொல்லப் போறாயா?"ன்னு கத்திக்கிட்டே காடு கடந்து வருது காடை.

எங்கிட்டுத்தான் இருந்திச்சோ மேகங்க. படக்குன்னு ஒண்ணுகூடிப் பளிச்பளிச்சுன்னு மின்னுதுக. கட்டையன் ஓடை கடக்குறதுக்குள்ள வளைச்சு வளைச்சுச் சாத்துதுக. ஆகாயமே ஒடஞ்சு தூள்தூளாக் கொட்றமாதிரி மொத்தை மொத்தையா விழுகுதுக மழைத்துளிக.

தல நனைஞ்சு, ஒடம்பு நனைஞ்சு, வேட்டி நனைஞ்சு, மாடு நனைஞ்சு, காடை நனைஞ்சு இதுக்கு மேல நனைய எடமில்லேன்னு வாராரு பேயத்தேவரு.

ஊரத்தொட்டு சன்னாசியப்பன் கோயிலுக்கிட்ட வந்தப்ப 'தட தட தட்டீர்'ன்னு வந்து விழுந்த ஒரு இடியில மாடு பிச்சுக் கிட்டுப் போயி வெள்ளையன் வீட்டுல நிக்குது.

"அடியே... அங்க போயி என்ன நிக்கிறவ? செல்லமா வஞ்சுக்கிட்டே மாட்டைத் தேடிப் போனா-வெள்ளையனும் மாரியம்மாளும் திண்ணையில ஒக்காந்து சுக்குத்தண்ணி குடிச்சுக் கிட்டுருக்காக சூடா. உயிர் மூச்சையெல்லாங் குடுத்து ஊதி அடுப்பப் பொழைக்க வைக்க மொகச்சி (முயற்சி) பண்ணிக்கிட்டிருக்கா முருகாயி.

"யாரு சின்னத்தேவரா? ஒக்காருங்கய்யா. மழை வெறிக்கப் போகலாம்."

ஒரு சின்ன சந்தோசமிருந்தாலும் குத்த உணர்ச்சியோட ஒக்காந்தாரு பேயத்தேவரு. நனைஞ்ச காடைய மடியில வச்சுத் தடவிக் குடுத்துக் கிட்டாரு.

"சுக்குத்தண்ணி குடிக்கிறிகளா?"

கொஞ்சநேரம் மவுனம்; மழைச் சத்தத்துக்கு வழிவிட்ட மவுனம்.

"அவுக நம்ம வீட்லயெல்லாம் சுக்குத்தண்ணி குடிப்பாகளா?"

என்னாடா இது... அடுப்பாங்கரையிலிருந்து குயில் குஞ்சு கூவுது! ஆனா அவ கேட்ட கேள்வியில எகத்தாளத்தவிட ஏக்கந்தான் தூக்கலாத் தெரிஞ்சுச்சு.

"சுக்குத்தண்ணி என்னா சுக்குத்தண்ணி... இந்தா இந்தக் காடைய ஒங்க வீட்லயே சுட்டுக் குடுங்க... இங்கயே திங்கிறேன்."

காடையைப் பேயத்தேவர் மாரியம்மாளிடம் குடுக்க "யாத்தே! இது என்ன வம்பாப் போச்சு"ன்னு அவ காடையை முருகாயி வசம் கடத்த-சுட்ட காடை இப்ப வரும் அப்ப வரும்ன்னு-கண்ண மழைக்குள்ள போட்டுட்டு மனச அடுப்புக்குள்ள போட்டுட்டுக் கொட்டக் கொட்ட ஒக்காந்திருந்தாரு பேயத்தேவர்.

அதையாச்சும் அவளே கொண்டாந்து குடுப்பாளா மாட்டாளா? மனசு கெடந்து மல்லாடுச்சு. கடைசியில அலுமினியத் தட்டுல சுடச் சுட அது வந்துச்சு. எடுத்துக் கடிச்சுப் பாத்தாரு. ஒதடு சுட்டு, உள்நாக்கு சுட்டு, எச்சியில சூடு கொறைய ருசி தெரிஞ்சுச்சு.

"இல்லையே! இது காடையில்லையே..."

"காடை இல்ல; கருணக்கெழங்கு"

முருகாயி கதவுக்குப் பின்னால நின்னு பளிச்சின்னு சிரிச்சா.

தனக்குச் சொல்ல வேண்டியத ஆத்தாகாரி மூலமாச் சுத்தி வளச்சுச் சொன்னா. "யாத்தே! நம் வீட்ல அவுக சாப்பிடுவாகளான்னுதான் கேட்டோம். அது காடையச் சாப்பிட்டா என்னா... கருணக் கெழங்கச் சாப்பிட்டா என்னா... சாப்பிட்டாகா! சந்தோசம்... கொழகொழன்னு கொழந்தமாதிரி இருக்கு காடை. கொல்ல மனசில்ல... குடுத்திரு"- காடையை ஒப்படைச்சிட்டா கத்தாழ நாரோட.

அடுப்புக்குப் போயிக் குளிர்காஞ்சு வெதுவெதுன்னு இருந்த காடை திரும்பவும் அவர் மடிக்கே வந்திருச்சு.

'அடியே புள்ள! நீ இத்தன ஈரமனசுக்காரியா?'

(வளரும்)



# வாழையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

13-X

### வாழையில் சிவப்பு சிலந்தி சிற்றுண்ணியின் தாக்கம்

வாழையில் சிவப்பு சிலந்தி சிற்றுண்ணியின் தாக்கம் பரவலாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. பொதுவாக இவ்வாறான சிவப்பு சிலந்தியின் தாக்கம் தென்னை, கமுகு போன்ற மரங்களில் இருப்பதுவே அறியப்பட்டுள்ளது. ஆனால் தற்போது இச்சிவப்புச் சிலந்தி சிற்றுண்ணி வாழையில் சேதத்தை ஏற்படுத்துவதை காணலாம். சிவப்பு சிலந்தி சிற்றுண்ணியின் தாக்கம் பரவலாக அதிகரித்து வருவதால் இதுபற்றிய சேதத்தைப்பற்றி மேலும் அறிந்து கொள்ளவேண்டியிருக்கின்றதல்லவா.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இச்சிவப்புச் சிலந்தி சிற்றுண்ணி (Red Spider Mite) புதிதாக உள்வாங்கப்பட்ட பீடையாகவே இருக்கின்றது. இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் தென்னை, கமுகு மரங்களில் அதிகளவில் சேதத்தையேற்படுத்தியிருப்பினும் எமது நாட்டில் வாழையில் அதுவும் கப்பல் வாழையிலைகளில் அதிக எண்ணிக்கையில் விரைந்து பரவி வாழையிலையின் கீழ்ப்புறத்தில் தங்கியிருந்து இலைப்பரப்பை சுரண்டி உறிஞ்சுவதால் அப்பகுதியிலுள்ள பச்சையம் அகற்றப்பட்டு அதேயிடத்தில் இலையின் மேற்பகுதி மஞ்சள் புள்ளிகளுடையதாக காணப்படும். சிற்றுண்ணியின் எண்ணிக்கை கட்டுக் கடங்காது அதிகரிக்குமிடத்து வாழையிலையின் விளிம்புப்பகுதி கருகி இலை உள்நோக்கி சுருளவுஞ் செய்யும்.

இங்கு கவனிக்கவேண்டிய விடய மென்னவென்றால் வாழைச் செய்கையாளர்களினால் இந்த சிற்றுண்ணியின் சேதத்தை நுண்ணூட்டச் சத்துக்களின் குறைபாட்டுடன் வேறு பிரித்தறிய முடியாதிருப்பதாகும்.

யாழ்.குடாநாட்டில் ஆரம்பத்தில் புன்னாலைக் கட்டுவன், ஈவினை, சுன்னாகம், ஊரெழு ஆகிய பகுதிகளில் காணப்பட்ட இதனது தாக்கம் தற்போது வடமராட்சி, கோப்பாய் மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளிலும் பரவியுள்ளது. இப்படியேபோனால் இச் சிற்றுண்ணி ஏனைய வாழை செய்கை பண்ணப்படும்பிரதேசங்களுக்கும் பரவக்கூடிய சாத்தியக் கூறு உண்டு.




தற்போது நிலவும் மப்பும் மந்தாரமுமான காலநிலை இச் சிற்றுண்ணியின் விருத் திக்கும் பரம்பலுக்கும் ஏற்புடையதல்லதாக இருப்பினும் காலநிலை திடு திடுப்பென மாறி வரட்சியான சூழல் ஏற்படும் இடத்து பீடையின் பெருக்கம் கட்டுக்கடங்காததாகி விடும். காற்றின் மூலம் ஒருதீவில் இருந்து இன்னொரு தீவிற்கு பரவக்கூடிய திறனுடையதாக இச் சிற்றுண்ணியிருப்பதால் யாழ். குடாநாட்டிற்கு தமிழ்நாட்டில் எல்லைப் பகுதியில் இருந்து பரவியிருக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை மறுப்பதற்கும் இல்லை. இதற்கும் மேலாக எங்களூரவர் தமிழ் நாட்டுக்கு சுற்றுலா சென்று திரும்பி வரும் போது எடுத்து வந்த சாப்பாடு சுற்றி வந்த வாழையிலையினூடா கவும் அது பரவி இருக்கலாம். வளிமண்டல வெப்ப நிலை அதிகரிக்கும் போது வெப்ப நிலைக்கு ஏற்ப தமது வாழ்க்கை வட்டத்தினை சமன் செய்யும் திறனுடைய இச் சிற்றுண் ணிப்பீடைகள் இங்கு விளையும் வாழைப்பயி ருக்கு சேதத்தை உண்டுபண்ண வாய்ப்புக்கள் உண்டு. அதிலும் உருவத்தில் மிகச் சிறியளவிலான இச் சிற்றுண்ணிகள் இலையின் கீழ்ப் புறத்தில் மிகவும் நெருக்கமாக காணப் படுகின்றன.

தொற்றுதலின் ஆரம்பத்தில் வாழையிலையின் விளிம்பில் செறிந்து காணப்பட்டாலும் நாள் செல்லச் செல்லத் தாக்கமும் அதி கரித்து அதனது எண்ணிக்கையிலும் பல மடங்கு பெருகிக் கொள்ளும்.

இந்த நிலை வரும் போது இலை நுனி கருகி உள் நோக்கி சுருள ஆரம்பிக்கும்.

வாழைச் செய்கையாளர்களே!

இச் சிற்றுண்ணியை வெறும் கண்ணால் அவதானிப்பது கடினம். கை வில்லை ஒன்றினது உதவியுடன் இலையின் கீழ்ப்பரப்பை அவதானியுங்கள். இலை விளிம்பில் முதலில் மஞ்சள் நிறமாகி சேதத்தை வெளிக்கொணரும் இச் சிற்றுண்ணி இறுதியில் அதிகமான சாறு உறிஞ்சுதலால் இலை விளிம்பைக் கருக வைத்துவிடும்.

கப்பல் வாழையினத்தில் அதிக சேதம் என்றாலும் கதலி, இதரை ஆகிய வாழையினங்களினதும் இச் சிற்றுண்ணியின் சேதம் அவதானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரவோலியா இன்டிக்கா எனப் பெயரிடப்பட்டுள்ள இச்சிற்றுண்ணியின் அடுத்த இலக்கு எந்தெந்தத்தாவரம் என இதுவரையிலும் கண்டு பிடிக்க முடியவில்லை. இது பற்றி தங்களது வாழைகளில் தாங்கள் பார்க்க நேரிட்டால் எமக்கு அறியத் தாருங்கள். உடனடியாக கட்டுப்பாடு முறைகள் என எதுவும் இல்லாத நிலையில் ஏதோ ஒன்றை பரிந்துரைப்பதைவிடுத்து இதனது சேதத்தை அளவிட்டு கண்காணிப்பது அவசியமாகிறது. வரும் முன் காப்பது சிறந்ததாயினும் இங்கே வந்தேறு குடியாகிவிட்ட இச் சிற்றுண்ணியை பெருக விடாது பாதுகாக்க வேண்டும். இயற்கையாக இச் சிற்றுண்ணிக்கு எதிரான இயற்கை எதிரிகள் குறைவாய் உள்ள நிலையில் வாழையில் மேலும் சேதத்தை ஏற்படுத்தாது இச் சிற்றுண்ணியை அவதானித்து கட்டுப்படுத்தல் அவசியமானதாகும்.






யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விளையாட்டில் வெற்றியீட்டிய மாணவர்கள் மற்றும் விருந்தினர்கள் நிற்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என் குமார்

# போரின்போது பாலியல் வன்முறையை போர்க்குற்றமாக விசாரிக்க வேண்டும்

வன்னியில் இறுதிக்கட்ட போரின் போது இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் உட்பட எல்லாப் போர்க் குற்றங்களும் விசாரணை செய்யப்பட்டு குற்றமிழைத்தவர்கள் எவராக இருந்தாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என பெண்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதை இல்லாது ஒழிப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் குழு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைத்திருப்பதைப் போல வன்னிப்போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் மற்றும் பெண்ணுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ளும் வகையிலான சர்வதேச கட்டமைப்பை உருவாக்குவது குறித்து ஆராயுமாறு இக் குழு இலங்கை அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளது.

போரின் இறுதி நாட்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாலியல் வன்முறைகள் குறித்த ஆவணம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை யின் இக்குழு சமர்ப்பித்திருந்தது.

இக் குறிப்பிட்ட ஆவணத்தில் குற்றமிழைத்தவர்கள் எவராக இருந்தாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கான புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என இக் குழு வலியுறுத்தியுள்ளது.

போரின் போது பாலியல் வன்முறைகள் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுவதை மனிதவுரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகளுக்கு எதிரான ஒரு குற்றமாகக் கருதுமாறு இக் குழு ஐக்கிய நாடுகள் சபையைக் கேட்டுக்கொண் டுள்ளது.

இத்தகைய போர்க்குற்றங்களை உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் ஆதாரங்கள் பலவற்றை முன்வைத்துள்ள போதிலும் இக்குற்றங்களை விசாரணை செய்வதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை என இக் குழு சுட்டிக் காட்டியுள்ளது. (ந-5)

## சரணாலயங்களுக்கு செல்லும் வீதிகள் புனரமைப்பு

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு பிரதேசங்களில் உள்ள சரணாலயங்களுக்கு பிரவேசிக்கும் வீதிகளை துரிதமாக புனரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றினால் பராமரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சரணாலய பிரவேச வீதிகளை புனரமைப்பது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் சந்திர வங்ச பத்திராஜர் கூறியுள்ளார். (ஶ்ரீ-2)

# இலங்கை வெளிவிவகாரக் கொள்கை ஐ.நா. நல்லிணக்க ஆணைக்குழு விசனம்

இலங்கை அரசாங்கத்தின் இன் றைய வெளிவிவகாரக் கொள்கைகள் குறித்து உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராக முன்னர் பணியாற்றியிருந்த எச்.எம்.ஜி. எஸ்.பாலியகார விசனம் தெரிவித்துள்ளார்.

இராஜதந்திரம் என்பது நண்பர்களை இழந்து பிற நண்பர்களைப் பெறும் ஒரு விடயமல்ல. மாறாக அனைவரையும் அரவணைத்து உள்வாங்கிப் போக வேண்டியது அவசியமானதென இவர் கடுமையான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

போருக்குப் பின்னர் நாடொன்று எதிர்கொள்ளும் வெளிவிவகாரக் கொள்கைகள் தொடர்பான சவால்கள் எனும் கருப்பொருளில் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இவர் உரையாற்றும் போதே இக்கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

அனைவரையும் அரவணைத்து உள்வாங்கிப் போகும் இராஜதந்திர எண்ணக்கருவின் அடிப்படையில் செயலாற்றினால்தான் சர்வதேச ரீதியில் இலங்கை மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை முறியடிக்க முடியும். மாறாகக் கொழும்பு மீது குற்றம் சுமத்துபவர்கள் யாரோ அவர்கள் தொடர்பான விரோதப் போக்குடன் செயற்படுவது எத்தகைய சாதகமான நிலைமைகளையும் ஏற்படுத்தப்போவதில்லை.

இலங்கையின் எல்லா இனங்களையும் அரவணைத்து உள்வாங்கிச் செயற்படுவதே ஜனநாயக ரீதியிலான சவால்களை எதிர்கொள்ளும் ஒரு நாட்டுக்குப் பயனை ஏற்படுத்தும். மாறாக எங்களை நம்பி நிற்பவர்களுக்குக் கெடுதல்களை ஏற்படுத்துவதும் மாற்றுக் கருத்துடையவர்களைத் துரோகிகள் என முத்திரை குத்துவதும் எவ்வித பயன்களையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை.

இறையாண்மை என்பது குறிப்பிட்ட ஓர் அரசாங்கம் நாட்டின் சட்டம், ஒழுங்குகளை எவ்வாறு நிலைநாட்டுகிறது என்பதில்தான் தங்கியிருக்கின்றது. சட்டமும் ஒழுங்கும் முறையாக நிலைநிறுத்தப்படாத இடத்து குறிப்பிட்ட குற்றங்கள் தண்டிக்கப்படாமல் தொடர்ந்தும் இடம் பெறுவதற்கு வழிவகுக்கும்.

இலங்கை அரசாங்கம், கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தத் தவறிவிட்டது எனக் குறிப்பிடும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கடந்த காலத்தில் இடம்பெற்ற சில விசாரணையின் சில விபரங்கள் எவருக்கும் தெரியாது எனத் தெரிவித்துள்ளன.

இலங்கையில் மனித உரிமைகள் முறையாகப் பேணப்பட வேண்டும். இதற்கு வன்னிப் போரின் போது பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அரசாங்கம் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

வன்னிப் போரின் இறுதி நாட்களில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புச் சொல்லும் தன்மைக்கு ஏற்ப அரசாங்கம் கரிசனையுடன் செயலாற்றுகின்றது என்பதை வெளிப்படுத்தும் வகையில் கொழும்பு செயற்பட வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பதுயரங்களைப் போக்க வேண்டியதும் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான காரணிகள் எவையென இனங்கண்டு, அப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய

# விக்ரம்-ராஜன்-கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் நடத்தும் 'விக்ரம்-ராஜன்-கங்கு' ஞாபகார்த்த மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட வன்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் நாளைய போட்டியில் காலை 8.30 மணிக்கு யாழ்.கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகமும் பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அணியை எதிர்த்து யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ஸ்ரீ-2)

# மீனவர் பிரச்சினை இரு நாடுகளுக்குமிடையில் பாரிய முறுகல் நிலையை தோற்றுவிக்கும்

## ஜே.வி.பி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை பாரிய முறுகல் நிலைமைகளை ஏற்படுத்தக் கூடும் என ஜே.வி.பி. எச்சரிக்கை விடுத்துள்ளது.

பருத்தித்துறை கடற்பரப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் ஆரோக்கியமானதல்ல என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பிரச்சினைகளினால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்படக் கூடும் எனவும் மீனவர்களுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்படாத வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# விச அரவம் தீண்டி இளைஞர் படுகாயம்

வரணி கறுக்காய்ப் பகுதியில் வயல் வேலை செய்து கொண்டிருந்த இளைஞன் ஒருவனை விச அரவம் தீண்டியதில் குறித்த நபர் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் கடந்த புதன் கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கரவெட்டி மத்திய பகுதியைச் சேர்ந்த குமாரசாமி அர்ச்சுனா (வயது 24) என்ற இளைஞனே பாதிக்கப்பட்டவராவார். (ஸ்ரீ-3-24)

# மாணவர் கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வை ஆதிகோவிலடி மக்கள் அமைப்புகளின் அனுசரணையுடன் நடராசா வள்ளியம்மாள் கல்வி ஊக்குவிப்பு நிதியம் நடத்தும் மாணவர் கௌரவிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

வல்லை சிவகுரு வித்தியாலயத்தில் த.பரமானந்தராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இலங்கை வங்கி வல்வெட்டித்துறை முகாமையாளர் எஸ்.சிறிகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஆசியுரையை ஆதிவைரவர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தி.விக்னேஸ்வரக் குருக்கள் ஆற்றுவார். (ந-63)

# காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு மறுசீரமைப்பு ஆணைக்குழு எடுக்கும்

(கொழும்பு)

மக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகளுக்கு துரிதமாக தீர்வினைப் பெற்றுக்கொடுக்க காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் பல்வேறு வகையிலான காணிப் பிரச்சினைகள் காணப்படுவதாக ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்காக நடமாடும் சேவைகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய அதிகளவில் காணி பிரச்சினைகள் உள்ள பிரதேசங்களில் ஒருநாள் சேவைகளை நடத்துவதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உத்தேசித்துள்ளது.

அநேகமாக காணிப் பிரச்சினைகள் ஒரே நாளில் தீர்த்து வைக்கவும் பாரதூரமான பிரச்சினைகள் சில நாட்களுக்குள் தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பில் ஆணைக்குழுவுக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகளுக்கு அலுவலகத்தினுள் வைத்தே தீர்வுகளை பெற்றுக் கொடுப்பது கடினமாக அமைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாகக் காணிப் பிரச்சினை நிலவுகின்ற மாவட்டங்களுக்குச் சென்று நடமாடும் சேவைகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)




★ 1600 - பெருவின் ஹுவாய்நப்பூட்டினா என்ற எரிமலை வெடித்தது.

★ 1674 - இங்கிலாந்துக்கும் நெதர்லாந்துக்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டதில் மூன்றாவது ஆங்கில-டச்சு போர் முடிவுக்கு வந்தது. இதன்படி டச்சு குடியேற்றப் பகுதியான நியூஆம்ஸ்டார்டாம் இங்கிலாந்திற்குக் கொடுக்கப்பட்டு நியூயோர்க் எனப் பெயர் மாற்றப்பட்டது.

★ 1819 - பிரித்தானியாவின் நடுகாண் பயணி வில்லியம் ஸ்மித் தெற்கு ஷெட்லாந்து தீவுகளைக் கண்டுபிடித்தார்.

★ 1876 - ஆங்கில இதழ் யாழ்ப்பாணம் கத்தோலிக்க கார்டியன் (Jaffna Catholic Guardian) முதலாவது இதழ் வெளியிடப்பட்டது.

★ 1878 - கிராமபோனின் காப்புரிமத்தை தோமஸ் எடிசன் பெற்றார்.

★ 1915 - முதலாம் உலகப் போர்: கலிப்பொலி போர் ஆரம்பமாயிற்று.

★ 1942 - இரண்டாம் உலகப் போர்: கிட்டத்தட்ட 250 ஜப்பானியப் போர் விமானங்கள் அவுஸ்திரேலியாவின் வட மண்டலத்தின் தலைநகர் டார்வின் மீது குண்டுகளை வீசியதில் 243 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: இவோ ஜீமா சண்டை - 30 ஆயிரம் ஐக்கிய அமெரிக்க கடற்படையினர் இவோ ஜீமா தீவில் தரையிறங்கினர்.

★ 1959 - ஐக்கிய இராச்சியம் சைப்பிரசுக்கு விடுதலையை வழங்கியது.

★ 1968 - சைப்பிரசின் லனார்க்கா விமான நிலையத்தில் கடத்தப்பட்ட எகிப்திய விமானத்தை விடுவிக்க சைப்பிரசின் முன் அனுமதியின்றி தாக்குதலில் ஈடுபட்ட எகிப்திய அதிரடிப் படைகளை சைப்பிரஸ் இராணுவத்தினர் தாக்கியதில் 15 எகிப்திய படைகள் கொல்லப்பட்டனர்.

★ 1985 - ஸ்பெயினில்வின் போயிங் விமானம் ஒன்று ஓயிஸ் மலையில் மோதியதில் 148 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1986 - சோவியத் ஒன்றியம் மீர் விண்வெளி நிலையத்தை விண்ணுக்கு ஏவியது.

### பிறப்புகள்

★ 1833 - ஏலி டுக்கோமன், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1906)

★ 1855 - உ.வே. சாமிநாதையர், தமிழறிஞர் (இ. 1942)

★ 1859 - சுவாண்டே ஆரேனியஸ், நோபல் பரிசு பெற்ற சுவீடன் வேதியியலாளர். (இ. 1927)

★ 1900 - ஜியோர்கஸ் செஃபேரிஸ், நோபல் பரிசு பெற்ற கிரேக்க எழுத்தாளர். (இ. 1971)

★ 1941 - டேவிட் குரொஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர்

★ 1943 - டிம் ஹண்ட், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர்.

★ 1956 - ரொடெரிக் மாக்கினன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்.

### இறப்புகள்

★ 1951 - அண்டிரே கைட், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1869)

★ 1952 - நூட் ஹாம்சன், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர். (பி. 1859)

★ 1988 - அண்டிரே கூர்னான்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1895)



★ 1473 - நிக்கலஸ் கொப்பர்னிக்கஸ், கணிதவியலாளர், விண்வெளியியலாளர். (இ. 1543)

# யாருக்கு யார் பொருத்தம்?

இருபதுவயதைத் தாண்டிவிட்டாலே இளைஞரிடம், ‘எப்போது திருமணச் சாப்பாடு போடப் போகிறாய்?’ என்று கோட்பது ஒரு சடங்காகிவிட்டது கல்விபோல, உத்தியோகத்தைப் போல,நம் சமூகத்தில் திருமணம் என்பதும் ஓர் அந்தஸ்தாகக் கருதப்படுகிறது.

திருமணம் என்பது தனக்கு அவசியமா, இல்லையா என்ற யோசனையே இல்லாமல், மற்றவர்கள் செய்துகொள்கிறார்களே என்று தானும் சிக்கிக் கொள்பவர்கள், மூன்றாம் நாளே பேயடித்ததுபோல் காணப்



படுகிறார்கள். திருமணம் என்று மட்டும் இல்லை...நீங்கள் எந்தச் செயல் செய்தாலும், அதற்கான பின் விளைவுகள் வெள்ளம்போல் அடித்துக் கொண்டு வரும் என்பதை மறக்கக் கூடாது.

அவற்றைச் சுணங்காமல் எதிர்கொள்ள உங்களைத் தயார் செய்து கொண்ட பிறகே, காரியத்தில் இறங்கவேண்டும். வயதில் மூத்தவர்கள், இளையவர்களுக்கு அப்பழுக்கில்லாத அன்பைச் செலுத்த, சொல்லித் தருவதில்லை. ஆனால், பெண்களைப் பெற்ற பெரும்பாலானவர்கள், புகுந்தவீட்டு மனிதர்களை அனுசரித்துப் போகச் சொல்லி தங்கள் மகளுக்கு அறிவுரை தருவார்கள்.

இவர்கள் தங்கள் மகளைப் பற்றிய பொறுப்பை அடுத்தவர் தோள்களுக்கு மாற்றுவதாகவே நினைத்து, அவர்களுக்கான துணையைத் தேடுகிறார்கள்.

சங்கரன்பிள்ளையின் திருமணமாகாத மகள், திடீரென்று கர்பமாகி வந்து நின்றாள். சங்கரன்பிள்ளை ஆத்திரமானார். அவளைத் தாறுமாறாக அடித்து, அதற்குக் காரணம் யாரென்று உலுக்கினார். அவள் அழுதுகொண்டே அவன் பெயரைச் சொன்னாள்.

சங்கரன்பிள்ளை தன் துப்பாக்கியை எடுத்துக்கொண்டார். நேரே அவனைத் தேடிப் போனார். அரண்மனை போன்ற அந்த வீட்டின் கதவை உதைந்து திறந்தார். கட்டிலில் படுத்திருந்த அவன் நெற்றிப் பொட்டில் துப்பாக்கி முனையை வைத்தார்.

‘அவசரப்படாதீர்கள். நாம் இதை பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.’ என்று அவன் கெஞ்சினான். ‘நீ ஊரிலேயே பெரிய பிசினஸ் மானாக இருக்கலாம். ஆனால், சின்னப்பெண்ணை ஏமாற்றியிருக்கிறாய். உனக்கு என் கையால் தான் சாவு’ என்று உறுமினார் சங்கரன்பிள்ளை.

‘ஐயா, உங்கள் மகளுக்குப் பெண் குழந்தை பிறந்தால் பத்து லட்சம் தருவதாக இருக்கிறேன்!’

‘ஆண்குழந்தையாக இருந்தால்?’

‘இருபது லட்சம் தருவேன்!’

சங்கரன் பிள்ளை வாயடைத்துப் போனார்.

சங்கரன்பிள்ளை துப்பாக்கியை மடக்கிப் பையில் வைத்துக்கொண்டு அவனுக்கெதிரில் நெளிந்தபடி மரியாதையாக நின்றார்.

செல்வத்தையும் வசதிகளையும் மட்டுமே அளவுகோலாக வைத்துத் திருமணங்களை நிச்சயம் செய்பவர்களுக்கும் சங்கரன் பிள்ளைக்கும் அதிக வித்தியாசம் இல்லை.

ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி... வசதியான குடும்பம், கைநிறையச் சம்பளம் என்பவற்றையே வாழ்க்கைப் பொருத்தங்களாக நினைப்பது பரிதாபமல்லவா?

மனப் பொருத்தம் பற்றி யோசிக்காமல், மற்ற காரணங்களை உத்தேசித்து, இரண்டு பேரை ஒரு கட்டுக்குள் கொண்டுவருவதுதான் பெரும்பாலான திருமணங்கள் கசப்பாகிப் போவதற்கான அடிப்படைக் காரணம்.

உங்கள் திருமண வாழ்வை எப்படிச் சந்தோசமாக அமைத்துக் கொள்வது என்று சொல்லித்தர, நூற்றுக் கணக்கான புத்தகங்களை இன்று மேல்நாட்டில் எழுதித் தள்ளுகிறார்கள்.

‘ஒரு நாளைக்கு இத்தனை தடவை ஐ லவ் யூ என்று சொல்... இத்தனை தடவையாவது தொட்டுப் பேசு... இத்தனை தடவையாவது முத்தம் கொடு’ என்று கணக்கெல்லாம் சொல்லி விற்பனை செய்கிறார்கள்.

பிறந்த குழந்தைகளுக்குத் தாய் எத்தனை முத்தம் கொடுக்க வேண்டும் என்று சொல்லித்தரக்கூட அங்கே ஆட்கள் இருக்கிறார்கள்.

அதையெல்லாம் படித்து ஒவ்வொன்றுக்கும் விரல் விட்டு எண்ணிக் கொண்டிருந்தால், ஒரு வாரத்திற்குள் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் போய்ச்சேர வேண்டியிருக்கும்.

உண்மையான அன்பிருந்தால், கட்டியணைக்கவும் முத்தம் கொடுக்கவும் ஏற்ற நேரத்தை இதயமே தேர்ந்தெடுக்கும்!

ஒரு தம்பதியின் இருபத்தைந்தாவது திருமண நாள் கொண்டாட்டங்கள் கோலகலமாக நடந்துகொண்டிருந்தன.


கணவனின் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்துகொண்டிருந்தது. மனைவி நெகிழ்ந்துபோய், அவனைத் தன்மீது சாய்த்துக்கொண்டாள்.

‘என்ன கண்ணா... என் மேல் அவ்வளவு பிரியமா? எதற்கு இவ்வளவு உணர்ச்சிவசப்படுகிறீர்கள்?’

கணவன் கண்ணீரை அடக்க முடியாமல் சொன்னான்... ‘நாம் காதலித்து, ஜாலியாகச் சுற்றிக் கொண்டிருந்தபோது, உன் அப்பா நீதிபதியாக இருந்தாரே... நினைவிருக்கிறதா?’

‘ஆமாம்!’

‘நம் விஷயம் தெரிந்து, அவர் என்னைத் தேடி வந்துவிட்டார். என் மகளைத் திருமணம் செய்யாமல் ஏமாற்றினால், உன்னை இருபத்தைந்து வருடம் உள்ளே தூக்கிப் போட்டுவிடுவேன் என்று மிரட்டினார். அந்த மிரட்டலுக்கு மட்டும் நான் பயப்படாமல் இருந்திருந்தால், இன்றைக்கு நான் விடுதலையாகி இருக்க வேண்டிய நாள்!’



ஆன்மீகம் 21

திருமணம் என்றாலே இப்படி வேதனைதானா?

இல்லவே இல்லை!

இரண்டு உயிர்கள் ஒன்றை ஒன்று புரிந்துகொண்டு, வாழ்க்கையை ஆனந்தமாக்கிக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் அது. உண்மையான அன்பைப் பகிர்ந்துகொள்ளக் கிடைக்கும் அற்புதமான வாய்ப்பு!

ஆனால், திருமணத்திற்கு அப்புறம் அடுத்தவரிடம் என்ன ஆதாயம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் கணவன்-மனைவி உறவு அமைந்தால், வாழ்க்கை கொந்தளிப்புகள் நிறைந்ததாகி விடும். கோர்ட் வரை போகாவிட்டாலும், குடும்ப அளவிலேயே திருமணம் தோற்றுவிடும்.


இருவருக்கிடையிலான உறவு இனிதாக இருக்க வேண்டுமானால், அங்கு ஆதாயக் கணக்குகளுக்கு இடம் இருக்கக்கூடாது.

அன்பு மட்டும் தீவிரமாக மலர்ந்திருந்தால், வாழ்க்கையின் மேடு பள்ளங்களில் விழுந்தாலும் காயப்படாமல், சுகமாக மிதந்து பயணம் செய்ய முடியும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# மின்பொறி ஊடகங்களில் செய்திச் செம்மையாக்கம்

04



இதே நிலைமை தொலைக்காட்சி ஊடகங்களிலும் பரவலாகக் காணக்கூடியதாக இருக்கிறது. ஒரு காட்சிப் படிமம் பார்வையாளனுக்கு சொல்லும் விடயங்களை மேலும் விளக்குவதற்காக மொழியைப் பயன்படுத்தும் நுணுக்கம் முறையாக பயன்படுத்தப்படாமல், அந்தக்காட்சியை விபரிப்பதற்காக அனாவசியமாக வார்த்தைகளை வீணடிக்கும் போக்கு காணப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட இரு விடயங்களையும் நோக்குகையில், வானொலி ஊடகத்தை அச்சு ஊடகமாகவும், தொலைக்காட்சி ஊடகத்தை வானொலி ஊடகமாகவும் பயன்படுத்தி அவறிற்கேயுரிய சிறப்பியல்புகளையும் குணாதிசயங்களையும் ஒதுக்கும் போக்கு என்று குறிப்பிட முடியும்

இலங்கையின் செய்தி ஊடகத்துறை, எதிர்கொள்ளும் பல சவால்கள் இருக்கின்றன.

> “கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில், சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை”

இதில் ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் (Media Ownership) பற்றிய பிரச்சினை முதன்மையானது. இந்த உரிமையாளர்கள் செய்தி அறிக்கைகளில் இடம்பெறக்கூடிய செய்தி அம்சங்களை மாத்திரமன்றி, அந்த அம்சங்களின் நிரற்படுத்தலையும் கட்டமைப்பையும் கூட தீர்மானிக்கக் கூடியதொரு நிலை காணப்படுகிறது. இவர்கள் தமக்குரிய தனிப்பாணி என்ற நியாயப்படுத்தல் ஊடாக செய்தி செவ்வையாக்கல் நடை முறையில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இதன் காரணமாக செய்தி செவ்வையாக்கல் துறையின் சிறந்த தராதரங்களையும், பண்புகளையும் நன்கு அறிந்தவர்கள் கூட அவற்றை விட்டுக் கொடுக்க வேண்டியதாகிறது.

செய்திகள் தனித்தமிழில் அமைய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை உதாரணமாகக் கூறமுடியும். ஊடக உரிமையாளர்களின் இந்த நிர்ப்பந்தம் காரணமாக சமூகத்தின் கடைசிப் பிரஜைக்கும் தகவல் வழங்க வேண்டிய உரிமையை தாரைவார்த்து, தமிழை வளர்பதற்காக உயர் கல்விக்கூடங்கள் ஆற்ற வேண்டிய பொறுப்பை ஊடகவியலாளர்கள் சிரமேற்க நேர்கிறது.

இலங்கையின் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களை ஆராய்ந்தால், எத்தனை நிறுவனங்கள் செய்தி செவ்வையாக்கம் சார்ந்த ஒழுக்கநெறிக் கோவையொன்றை அல்லது வழிகாட்டல் கோவையொன்றை பின்பற்றுகின்றன என்ற கேள்வி எழுகிறது.

செய்திச் செவ்வையாக்கம் என்பது ஊடக விழுமியங்கள் சார்ந்த வரம்புகள் நிர்ணயிக்கப்பட்ட துறையாகும். ஒழுக்கநெறிக்கோவைகள் போன்றவை அத்தகைய வரம்புகளைப் பேண உதவுகின்றன. இந்த வரம்புகள் மீறப்படுகையில் திரிபுபடுத்தப்படுதல்கள், மிகைப்படுத்தல்கள் போன்றவை இயல்பாக இடம்பெற்று, உள்ளதை உள்ளபடி கூறல், நடுநிலையாகச் செயற்படுதல் போன்ற ஊடக விழுமியங்கள் மீறப்படும் சூழ்நிலை உருவாகிறது.

இலங்கையைப் பொறத்தவரையில், அரச வானொலி, சூரியன், சக்தி, வசந்தம், வெற்றி போன்ற வானொலிகள் தத்தம் நிலைப்பாட்டிற்கேற்ப, செய்திகளின் முக்கியத்துவத்தையும் எடுத்துக்கூறி வருகின்றன. இந்த முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு செய்தி செவ்வையாக்கத்தில் ஊடகவியலாளர்கள் அதிக கவனம் செலுத்துவதும் அவசியமாகிறது.

(முற்றும்)

**வீ.ஏ.திருஞானசுந்தரம்,**
**முன்னாள் பிரதிப்பணிப்பாளர்நாயகம்,**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.**

# எனது கணவர் படுகொலை செய்யப்பட்டதற்கு காரணம் சிங்களப் பயங்கரவாதமே

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

புலிப்பயங்கரவாதமும் அரச பயங்கரவாதமும் வெவ்வேறு வகையிலானவை. ஆனாலும் சிங்களப் பயங்கரவாதமே எனது கணவர் விஜயகுமாரதுங்கவை படுகொலை செய்தது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கணவருமான விஜயகுமார துங்கவின் 23 ஆவது நினைவு தினம் கடந்த புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. அவரது சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத்



தெரிவிக்கையிலேயே சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

எனது கணவர் அரச பயங்கரவாதத்தால் பழிவாங்கப்பட்டார். அந்த பயங்கரவாதம் ஜே.வி.பி.பயங்கரவாதத்தைப் போன்றது அல்ல அதிலிருந்து மாறுபட்டதாகும். தற்போதும் அந்த நிலைமை தலை தூக்கியிருக்கின்றது. எனது கணவர் விஜயகுமாரதுங்க சிறையில் அடைக்கப்பட்டு பலதரப்பட்ட வகையில் துன்புறுத்தப்பட்டு பழிவாங்கப்பட்டார்.

அத்துடன் , அன்றிருந்த சிங்களப் பயங்கரவாதம் அவரை படுகொலை செய்து விட்டது. அன்றிருந்த அரச மற்றும் சிங்களப் பயங்கரவாதமானது தற்போது அதிகாரப் பயங்கரவாதமாக மாற்றமடைந்திருக்கிறது. அதிகாரப் பயங்கரவாதமே தற்போது நாட்டில் இருக்கின்றது என்றார். (ஸ்ரீ)

## பெருவிளையாட்டுப்போட்டிகள்

அகில இலங்கை ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர் போட்டியின் பெரு விளையாட்டுக்கள் இன்றும் நாளையும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மேலும் எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் ஆசிரியர்களுக்கான ஏனைய மெய்வல்லுநர் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. ஏற்கனவே விண்ணப்பித்த ஆசிரியர் கள் வடமாகாண உடற்கல்வி உதவிக் கல் விப் பணிப்பாளர் எஸ். சத்தியபாலனிடம் தமக்குரிய இலக்கங்களை பெற்றுக் கொள் ளலாம் என அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## ஏலவிற்பனை

திருநெல்வேலியில் உள்ள செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையத்திலுள்ள காளைமாடு எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. ஏலத்தில் தெரிவு செய்யப்படுபவர் உடனடியாகவே முழுப்பணத்தையும் செலுத்தி நிலையத்திலிருந்த காளை மாட்டை அப்புறப்படுத்தல் வேண்டுமென இந்நிலையத்தின் கால்நடை வைத்திய டாக்டர் பொ. மகாதேவன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யா/ மயிலணி சைவ மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மயிலணி கந்தசுவாமி கோயில் ஆலய முன்றலில் பாடசாலை அதிபர் நா. சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், வலிகாமம் அமைப்பாளர் எஸ். பாலகிருஷ்ணன், வலி. வடக்கு அமைப்பாளர் இ. ஜெயபாலசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வளர்பிறை முன்பள்ளி முதன்மை ஆசிரியர் திருமதி. த. சாந்தினி, ஜனசக்தி முன்பள்ளி முதன்மை ஆசிரியர் திருமதி ஜெ.வடிவாம்பிகை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஸ்ரீ-9-54)

✦ ✦ ✦

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரிமைதானத்தில் அதிபர் திருமதி. ரி.ஏ. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தயாளன், சிறப்பு விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். பிரதான கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் வி. அருளானந்தம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை திருமதி. ரோகினி தயாளன் வழங்கி கௌரவிப்பர்.

(ஸ்ரீ-2)

# வெளிநாட்டில் பணிபுரியும் எம்மவர்களால் பொருளாதார அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பு

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(கொழும்பு)

உலக பொருளாதார நெருக்கடியின் போது எமது நாடு எதுவிதமான பின்னடைவுமின்றி அபிவிருத்திகளை முன்னெடுத்தது. இதற்கு வெளிநாட்டில் தொழில் புரியும் எம் நாட்டவர்களின் அந்நிய செலாவணி வருமானம் பாரிய பங்களிப்பினை வழங்கியது என்று அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

வெளிநாடுகளில் தொழில் புரியும் எம்மவர்களின் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசத்தின் மகுடம் கண்காட்சியின் போது வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி தொடர்பான அமைச்சர் டிலான் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வெளிநாட்டில் வேலை செய்யும் எம்மவர்களது பிள்ளைகளின் கல்வித் திறனை மேம்படுத்தி ஆசியாவின் ஆச்சரியமிக்க நாட்டுக்கான அவர்களது பங்களிப்பினையும் பெற்றுக் கொள்ளப்படும். அதற்காகவே ஐந்தாம் வகுப்பு, க.பொ.த. (சா/த), உயர்தர பரீட்சைகளில் சித்தியெய்தியவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகிறது. இத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

உலகின் பொருளாதார நெருக்கடி தோன்றிய போதும் எமது நாட்டை அது பாதிக்கவில்லை. அபிவிருத்திகள் தடையின்றி முன்னெடுக்கப்பட்டது.



இதற்கு வெளிநாடுகளில் தொழில் புரியும் எம்மவர்களின் வெளிநாட்டுச் செலாவணி பெரும் பங்களிப்பை வழங்கியது.

இவர்களை நாம் வெளிநாடு சென்ற வீரர்கள் என்று போற்ற வேண்டும். அன்று தேயிலை , இறப்பர் , தென்னை ஏற்றுமதி மூலம் பொருளாதாரம் பலமடைந்தது.

இன்று வெளிநாட்டில் தொழில் புரியும் எம்மவர்களால் பொருளாதார அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பு கிடைக்கின்றது. எனவே அவர்களது பிள்ளைகளை கல்வித் துறையில் மேம்படுத்துவது, அதற்காக பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர்களுக்கு புலமைப் பரிசில் கள் வழங்கப்படுகிறது என்றார்.

இந்நிகழ்வில் வைத்து ஐந்தாம் வகுப்பு, க.பொ.த. (சா/த) ,உயர்தர சித்தி பெற்ற மாணவர்களுக்கான தலா ரூபா 15 ஆயிரம், ரூபா 20 ஆயிரம் ரூபா, 30 ஆயிரம் வீதம் 50 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டது. (ஸ்ரீ)

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்க மூன்று மில்லியன் அமெரிக்க டொலர் தேவை

(கொழும்பு)

மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கு இன்னமும் மூன்று மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை என உலகக் உணவுத் திட்டம் அறிவித்துள்ளது.

வெள்ள நிவாரண உதவிகளுக்காக 51 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப் படுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் மீளவும் வெள்ளத்தினால் பாதிப்புக்கள் ஏற்படவும் அதிகளவு உதவும் தொகைகளை வழங்குமாறு உலக உணவுத் திட்டம் உதவி வழங்கும் நாடுகளில் கோரியுள்ளது.

மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு மதிப்பீடுகளை செய்து வருவதாக குறிப்பிடப்படுகிறது.

அதிகளவு உதவிகள் கிடைக்கப் பெறும் என உலக உணவுத் திட்டம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)





அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையினால் கிளிநொச்சி ஜெயபுரம் கிராம மக்களுக்கு நடமாடும் மருத்துவ சேவை புனித யோவான் ஆலய வளாகத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. இதில் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் எஸ்.றொபின்சன் நோயாளர்களைப் பார்வையிடுவதனையும் நடமாடும் சேவையில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்

# இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள்

# சர்வதேச விசாரணை அவசியம்



இலங்கையின் 25 வருட உள் நாட்டு யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பான சுதந்திரமான சர்வதேச விசாரணை ஒன்றுக்கு பிரிட்டன் ஆதரவளிப்பதாகத் தெரிவிக்க வேண்டும் என பிரிட்டன் பிரதமர் டேவிட் கமருனிடம் கோரி மூன்று முக்கியமான கட்சிகளைச் சேர்ந்த 41 பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு அறிக்கை ஒன்றைக் கையளித்துள்ளார்கள்.

போர்க் குற்றங்கள் நடைபெற்றதாகக் கூறப்படும் இலங்கையில் ஐக்கிய அமெரிக்காவின் ராஜாங்கத் திணைக்களம், ஐரோப் பிய ஆணைக் குழு, சர்வதேச நெருக்கடிகள் தொடர்பான குழு, மற்றும் சட்ட விரோத படுகொலைகள், சட்டத்திற்குப் புறம் பான தண்டனைகள் குறித்த ஐ.நாவுக்கான விசேடபிரதிநிதி ஆகியோர் முன்வைத்த நம்பத்தகு சாட்சியங்கள் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்தைக் கோரும் முக்கியமான ஆவணங்களாக உள்ளன.

பாரபட்சமற்ற முறையிலும் ஆரோக்கியமான வகையிலும் இக்குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்வது சமாதானம் உருவாகுவதற்கும் நல்லிணக்கம் ஏற்படுவதற்கும் அத்தியாவசியமானது என இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருதுகிறார்கள்.

இந்தக் கடிதம் வெளிவரும் நேரம் மிக முக்கியமானது. ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் தனக்கு இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்ட ஐ.நா ஆலோசனைக் குழுவின் அறிக்கையை சர்வதேச சமூகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இக்கடிதம் வெளிவந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

**கௌரவமிக்க டேவிட் கமரூன்**
**பா.உ பிரதம மந்திரி,**
**10 டவுனிங் வீதி,**
**லண்டன்.**
**பெப்ரவரி 2011.**

**அன்புமிக்க பிரதமர் அவர்களுக்கு,**

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரிக்க சுதந்திரமான சர்வதேச விசாரணை ஒன்று அவசியம். இலங்கையின் கடந்த 25 வருட உள்நாட்டு யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் சுதந்திரமான சர்வதேச விசாரணை

## பிரிட்டிஸ் பிரதமர் டேவிட் கமரூனுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் கடிதம்

ஒன்றை மேற்கொள்ள தாங்கள் தமது எல்லா அதிகாரத்தையும் பயன்படுத்தி வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரியே இக்கடிதத்தை எழுதுகின்றோம்.

ஐக்கிய அமெரிக்காவின் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏற்கெனவே இது தொடர்பில் ராஜாங்கச் செயலாளருக்கு அவ்வாறான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரி கடிதம் எழுதியுள்ளதை தாங்கள் அறிந்திருப்பீர்கள். அதனைப் பலப்படுத்தும் வகையில் பிரித்தானிய அரசாங்கமும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்.

2009 ஒக்ரோபரில் போரின் போது இலங்கையின் மனித உரிமைகள் குறித்து ஐரோப்பிய மனித உரிமை ஆணையம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அவ்வறிக்கை பொலிஸாராலும், அரசாங்கத்தில் உள்ள பொறுப்பு வாய்ந்த நபர்களாலும் பாதுகாப்புப் படையினராலும் மேற்கொள்ளப்பட்ட சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகள் அதி உச்சத்திலிருந்ததை சுட்டிக்காட்டியது.

அரசியல் படுகொலைகள் உட்பட சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகள் பரந்தளவில் நடைபெறுவதை அது எடுத்துக் கூறியது. அது அரசியல் மற்றும குடியியல் உரிமைகளை ஒடுக்கியது. படையினரால் திட்டமிடப்பட்ட சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகள் அரசாங்கத்துடன் தொடர்புடைய இராணுவத் துணைக்குழுக்கள் பொலிஸார் போன்றவர்களால் மேற்கொள்ளப்படும் படுகொலைகள் குறித்தும் அது வெளிப்படுத்தியது.

அதே மாதத்தில் ஐக்கிய அமெரிக்காவின் ராஜாங்கத் திணைக்களமும் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதில் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டியிருந்த ஏராளமான குற்றங்கள் பட்டியலிடப்பட்டிருந்தன. பொதுமக்கள் மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் குழந்தைப் போராளிகளைப் பயன்படுத்துதல், ஆயுதந்தாங்காத பொது மக்களையும் முன்னாள் போராளிகளையும் சட்டத்துக்குப் புறம்பாகத் தடுத்து வைத்தல், துஷ்பிரயோகம் செய்தல், கைது செய்யப்பட்டவர்கள் அல்லது சரணடைந்தவர்களைப் படுகொலை செய்தல், மற்றும் தனிப்பட்ட காணாமல் போதல்கள் என்பவை குறித்தும் அது அறிக்கையிட்டிருந்தது.

ஆகவே போரின் இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்து போதுமானளவு ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இப்போது நாங்கள் நம்புகிறோம் இது குறித்து விசாரணைகள் சுதந்திரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என.

உலகம் முழுவதும் உள்ள நமது நண்பர்கள் நம்புவது போலவே சுதந்திரமான விசாரணை ஒன்று தான் நம்பிக்கையையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப உதவும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

இலங்கையின் மனித உரிமை துஸ்பிரயோகம் குறித்த கடந்த கால விசாரணைகள் வெற்றியளிக்கவில்லை. நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. இதனால் தான் உலகம் முழுவதுமுள்ள அமைப்புக்கள் சர்வதேச விசாரணையை வேண்டி நிற்கின்றன.

உள்நாட்டில் விசாரணை நீதியான முறையில் நடத்தப்படாத போது அரசியல் வலு நியாயமானதாக இல்லாத போது குற்றம் சாட்டப்பட்ட விடயங்கள் குறித்து விசாரிக்க சர்வதேச விசாரணை ஒன்று அவசியம். இல்லாத போது உள்நாட்டு மோதல்களுக்கு இலங்கையின் மாதிரியை ஏனைய நாடுகளும் பின்பற்ற முனையும் என சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு சுட்டிக் காட்டியுள்ளது.

மனித உரிமைகள் குறித்து விசாரிக்கவும், காணாமல் போனவர்கள் குறித்து விசாரிக்கவும் என 1991 இலிருந்து ஏற்கெனவே இவ்வாறான ஒன்பது விசாரணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. அரசாங்கத்தின் தலையீடு, தாமதமான விசாரணை, நற்பெயரை இழந்தமை போன்ற பல்வேறு காரணங்களால் ஆணைக்குழு உறுப்பினர்கள் பலர் தாமாகவே பதவி விலகினர் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையின் விசாரணைக்கு ஏற்புடையதல்ல என்று மூத்தோர் அவையைச் சேர்ந்த டெஸ்மன்ட் டுட்டுவும், லக்தார் பிரகிமியும் தெரிவித்துள்ளனர். அதன் காரணமாக சர்வதேச விசாரணை ஒன்று அவசியம் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

காங்கிரஸின் உறுப்பினர்கள் இது தொடர்பில் ராஜாங்கத் திணைக்களத்திற்கு எழுதியுள்ளமையானது சர்வதேச சமூகத்தின் விருப்பத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. அது தான் பிரித்தானியாவினதும் பெரும் ஈடுபாடாக இருக்க முடியும். நீண்ட கால இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைத் தரக்கூடியதாக இருக்கும். எவ்வாறாயினும் முழு உண்மைகளையும் தெரிந்தும் புரிந்தும் கொண்டாலே சமாதானத்தை எட்டலாம் என நாம் நம்புகிறோம்.

இத்தகைய காரணங்கள் பலவற்றாலும் பாரபட்சமற்ற முறையிலும் ஆரோக்கியமான வகையிலும் சுதந்திரமான சர்வதேச விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு அதனூடாக போரின் போது நன்ன நடைபெற்றது என்ற முழு உண்மையையும் வெளிக்கொணரப்பட வேண்டும். அது தான் இலங்கையின் நிரந்தரமான சமாதானத்திற்கு ஆதரவாக அமையும். எனவே அவ்வாறான விசாரணை ஒன்றுக்கு பிரிட்டன் ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

**உங்கள் உண்மையுள்ள**
**41 பாராளுமன்ற உறுப்பினரும் ஒப்பமிட்டுள்ளனர்.**

# பஹ்ரேனில் அரசுக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந்தது

## மோதலில் 5 பேர் பலி; 100 பேர் காயம்

(லண்டன்)

எகிப்தில் ஏற்பட்ட ஜனநாயக உணர்வு ஆர்ப்பாட்டத்திற்கு கிடைத்த வெற்றியின் அறிகுறி தற்போது வளைகுடா நாடான பஹ்ரேனை தொற்றிக் கொண்டிருக்கிறது.

பஹ்ரேன் தலைநகரான மனாமாவில் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுமி நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர். ஆயிரக்கணக்கில் குழுமிய அவர்களை பாதுகாப்பு படையினர் விரட்டி அடித்தனர். அந்த மோதலில் 5 பேர் உயிரிழந்ததாகவும் 100 பேர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நடைபெறும் இந்த போராட்டத்தில் அரசுக்கு எதிராக வைக்கப்படும் கோரிக்கை அரசியல் சீர்திருக்கங்களை கொண்டு வர வேண்டும் என்பதேயாகும்.

ஏற்கனவே எகிப்திலும் துனிஷியாவிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று அந்நாட்டு ஜனாதிபதிகளை பதவியிறக்கத்திற்கு வழிவகுத்த போராட்டங்களின் சாயல் இப்போது இங்கே இருக்கிறது.

தற்போது ஈரான் லிபியாவிலும் கலவரம் பரவி வருகிறது. பஹ்ரேனில் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை இப்ராகீம் ஷெரீப் தலைமையிலான செக்யூலர் வாத் கட்சி நடத்துகிறது. பஹ்ரேனில் ஏற்பட்ட அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அமெரிக்காவுக்கு சற்று எரிச்சல் தரும் அம்சமாகும்.

அமெரிக்காவின் இராணுவ கூட்டாளி பஹ்ரேன். இங்குள்ள கடற்பகுதியில் அமெரிக்காவின் ஐந்தாவது கப்பல் படைத்தளம் நிரந்தரமாக இருக்கிறது.

பஹ்ரேனில் வாழும் மக்கள் பெரும் பகுதியினர் ஷியா முஸ்லிம்களாகும். ஆனால் ஆட்சியாளர்கள் மற்றொரு பிரிவான சன்னி முஸ்லிம்கள். கடந்த 200 ஆண்டுகளாகவே இங்கு பெரும்பான்மை இல்லாத பிரிவினர் ஆட்சி என்பது ஒரு நெருடலாக இருந்த போது தற்போது ஆட்சி மாற்றம் தேவை என மக்கள் குரல் எழுப்பி போராட முன்வந்துள்ளனர்.

கடந்த 2002 இல் இங்கே மன்னர் தலைமையிலான சட்ட நெறிமுறை அரசு கொண்டு வரப்பட்டதே தவிர ஆட்சியில் பெரிய மாற்றமில்லை. மக்கள் எதிர்ப்பு அதிகரிப்பதை கண்ட பஹ்ரேன் மன்னர் ஷேக் அகமது பின் இசா அலி கலிபா இரு நாட்களுக்கு முன் தொலைக்காட்சியில் தோன்றி நாட்டில் பொருளாதார சீர்திருத்தங்கள் தொடரும் என அறிவித்தார்.

ஆனால் அரசை எதிர்த்து மனாமாவில் உள்ள பேரள் ஸ்குயர் சதுக்கத்தில் கூடாரம் அமைத்து மக்கள் தங்கி ஆர்ப்பாட்டத்தை அஞ்சாமல் செய்து வருகின்றனர். பொலிஸார் அடக்குமுறை நேற்று முன்தினம் அதிகரித்ததால் இந்த மோதலில் 5 பேர் உயிரிழக்க நேரிட்டது என்றும் காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் இரத்தம் தர மக்கள் கூட்டமாக வந்தபோதும் அதை பொலிஸார் தடுத்தது மக்களை ஆத்திரமடையச் செய்தனர் என கூறப்படுகிறது.

(ஸ்ரீ-2)



எகிப்து எழுச்சியை தொடர்ந்து அரபு தீபகற்ப நாடான ஏமனில் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே பதவி விலகக் கோரி தொடர்ந்து போராட்டம் இடம்பெற்று வருகிறது. அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தி வருபவர்களும் (மேலே) அரசு ஆதரவாளர்களும் சனா நகரில் கல்வீச்சில் ஈடுபட்டனர்.




## போராட்டங்களை நடத்துவதற்கு பஹ்ரேய்ன் அரசாங்கம் தடை

போராட்டங்களை நடத்துவதற்கு பஹ்ரேய்ன் அரசாங்கம் தடை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பஹ்ரேய்னில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் எதிர்ப்பு போராட்டங்களை நடத்தக் கூடாது எனவும் இராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் தேசிய தொலைக்காட்சி ஊடாக அறிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக நடத்தப்பட்டு வரும் போராட்டங்களில் மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் நூற்றுக் கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் இராணுவத்தினர் எடுப்பார்கள் என உள்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவில் நடத்தப்பட்டு வரும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் எதிரொலியாக இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாரியளவிலான அரசியல் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தி பஹ்ரேய்னில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன், பஹ்ரேய்ன் வெளிவிவகார அமைச்சர் கலிட் பின் அஹமட் அல் காலீபாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கடந்த 18 ஆண்டுகளாக முதல் பெரும்பான்மை ஷியா முஸ்லிம் மக்களை சிறுபான்மையினரான சுனி முஸ்லிம் அரசு பரம்பரை ஆட்சி நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தலைநகர் மனாமாவில் முக்கிய நிலைகளில் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

(ஸ்ரீ-2)



ஈராக் சுலைமானியா நகரில் குர்திஷ் இன மக்கள் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.

## அறுவை சிகிச்சையில் விபத்துக்களை தவிர்க்கும் திரவம் கண்டுபிடிப்பு

(லண்டன்)

அறுவை சிகிச்சையின் போது ஏற்படும் விபத்துக்களை தவிர்க்க நோயாளியின் உடல் நரம்புகளை ஒளிரச் செய்யும் திரவம் ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

பொதுவாக அறுவை சிகிச்சை நிபுணர்கள் நோயாளியின் உடலில் உள்ள நரம்புகளைச் சரியாக அடையாளம் கண்டுபிடிக்க தவறும் போதுதான் விபத்துகள் ஏற்படுகின்றன. இதனால் எலக்ரோனிக் கருவிகளின் உதவி தேவைப்படுகிறது.

இந்நிலையில் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலை விஞ்ஞானிகள் தீவிர ஆய்வில் ஈடுபட்டு மின்காந்த அலைகளில் ஒளிரக் கூடிய திரவம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். அறுவை சிகிச்சையின் போது நோயாளி உடலில் இதை செலுத்தினால் அவரது உடல் நரம்புகள் அனைத்தும் ஒளிரும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

முதற்கட்டமாக அமினோ அமிலங்கள் அடங்கிய இந்த புரோட்டின் கலவையை எலிகள் மீது செலுத்தி சோதனை செய்த போது அவற்றின் உடலில் உள்ள நரம்புகள் ஒளிர்ந்தன. இதன் மூலம் உடலின் பிற பகுதிகளையும் நரம்புகளையும் எளிதாக பிரித்தறிய முடிகிறது. மேலும் அறுவை சிகிச் சைகளில் ஏற்படும் விபத்துக்களையும் தவிர்க்க முடியும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

## தலைக்குள் கத்தியுடன் நான்கு வருடங்களாக வாழ்ந்த வாலிபர்

சீனாவைச் சேர்ந்த லீபூ என்பவர் தனக்கு அடிக்கடி தலைவலிப்பதாக மருத்துவரிடம் சிகிச்சை பெற சென்றார். அவருடைய தலையை ஸ்கான் செய்து பார்க்கையில் அவருடைய தலையில் கத்தி இருந்தது தெரியவந்தது.

இதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்த டாக்டர்கள் அவரிடம் இது குறித்து விசாரித்த போது,

இதுகுறித்து விளக்கிய லீபூ, தான் கடந்த 2006 ஆம் ஆண்டு யுன்னான் புரோவின்ஸ் (சீனா) பகுதியில் சென்ற போது வழிப்பறி கொள்ளையர்களால் கத்தியால் தாக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இதனை அடுத்து லீபூக்கு அறுவை சிகிச்சை செய்து கத்தியை அகற்ற டாக்டர்கள் முடிவு செய்தனர். அதன்படி அறுவை சிகிச்சை செய்து கத்தியை அகற்றினார்கள்.



இதுகுறித்து மருத்துவர் கூறுகையில்,

கத்தியுடன் 4 ஆண்டுகள் இருந்தது மிக அரிதான ஒன்றாகும். தன்னுடைய பணிக்காலத்தில் இது போன்ற ஒரு பாதிப்பு அடைந்த ஒருவரை பார்த்ததில்லை என்று தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# வெள்ளம் காரணமாக மீன்களுக்கு நோய்

## மீனவர்கள் பெரும் பாதிப்பு

மட்டக்களப்பு வாகரை ஆற்றில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மீன்களுக்கு நோய் ஏற்பட்டுள்ளதனால் மீனவர்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை 2 மாதங்களாக பாதிக்கப்பட்டுள்ளது.

மீன்களின் வால்பகுதி, உடலின் நடு பகுதிகளில் காயத்துடன் கூடிய புழுக்கள் காணப்படுவதாகவும் இதனை பிடித்து உண்பதற்கோ விற்பனை செய்வதற்கோ இயலாத நிலை காணப்படுவதாகவும் வருமானமின்மையால் அன்றாட உணவை உட்கொள்ள முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஒட்டி, செத்தல், மணலை, கிழங்கன் விரால் போன்ற ஆற்று மீன்களுக்கு இந் நோய் ஏற்பட்டுள்ளது.

இதனால் மீனினம் அருகி வரும் நிலைமையை கருத்திற்கொண்டு இப்பகுதி மீனவர் சங்கத்தினால் கட்டு வலை கட்டக்கூடாது என்றும் தற்போது இறால் பிடிக்கும் காலமாதலால் வீச்சு வலையை பயன்படுத்தும் படியும் மீன் குஞ்சுகள் வலையில் சிக்கினால் அவற்றை மீண்டும் நீருக்குள் விடும் படியும் விளம்பர சுவரொட்டிகள் வாகரை பிரதேசத்தில் பல்வேறு இடங்களில் ஒட்டப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# அமெரிக்க பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை

இலங்கை போன்ற உலகக்கிண்ண கிரிக்கெட்போட்டி நடைபெறும் நாடுகளுக்கு பயணம் செய்வதில் அவதானமாக இருக்குமாறு அமெரிக்கா அந்நாட்டு பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறான பெரிய நிகழ்வுகளின் போது தாக்குதல்களை நடத்துவது பயங்கரவாதிகளுக்கு இலகுவானதாக இருக்கும். இதன் காரணமாக, இலங்கை, இந்தியா, பங் களாதேஷ் போன்ற நாடுகளுக்கு பயணம் செய்வதில் அவதானத்துடன் இருக்குமாறு அமெரிக்க இராஜங்கத் திணைக்களம் அந் நாட்டுப் பிரஜைகளுக்கு தெரிவித்துள்ளது.

இவ்ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இன்று முதல் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறும் என்பது பற்றிய குறிப்பான தகவல்கள் எதுவும் அமெரிக்காவிடம் இல்லை. இருந்த போதிலும் இவ்வாறான நிகழ்வுகளின் போது பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம் பெறலாமெனவும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# திருகோணமலையில் தபால் மூலம் வாக்களிக்க 11ஆயிரத்து446 பேர் தகுதி

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 11 ஆயிரத்து 446 பேர் தகுதி பெற்றுள்ளதாக திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் நாலக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை நகரசபைக்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கு ஆயிரத்து 101 வாக்காளர்களும் கிண்ணியா நகரசபைக்கு 496 வாக்காளர்களும் சேருவில பிரதேச சபைக்கு 948 வாக்காளர்களும் வெருகல் பிரதேச சபைக்கு 10 வாக்காளர்களும் கந்தளாய் பிரதேச சபைக்கு 3 ஆயிரத்து 360 வாக்காளர்களும் மொறவன பிரதேச சபைக்கு 578 வாக்காளர்களும் கோமரங்கடவல பிரதேச சபைக்கு ஆயிரத்து 136 வாக்காளர்களும் பதவிசிறிபுர பிரதேச சபைக்கு ஆயிரத்து 30 வாக்காளர்களும் திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச சபைக்கு 737 வாக்காளர்களும் குச்சவெளி பிரதேச சபைக்கு 105 வாக்காளர்களும் மூதூர் பிரதேச சபைக்கு 790 வாக்காளர்களும் தம்பலகாமம் பிரதேச சபைக்கு 915 வாக்காளர்களும் தகுதி பெற்றுள்ளதாக உதவி தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் 12 ஆயிரத்து 56 பேர் தபால் மூலம் வாக் களிப்பதற்காக விண்ணப்பித்திருந்தனர். இவர் களில் 610 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் 11 ஆயிரத்து 446 பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் உதவி தேர்தல் ஆணையாளர் நாலக றத்நாயக மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மு.கா.உயர்பீட உறுப்பினரின் வீட்டின் மீது கல்வீச்சு தாக்குதல்

மட்டக்களப்பு மாவடிச்சேனையில் பல நோக்கு கூட்டுறவுச் சங்க வீதியிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் எம்.பி.எஸ்.ஹூசைனின் வீட்டின் மீது இனந்தெரியாதோர் கற்களால் வீசி தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில இடம் பெற்றுள்ளது. இருப்பினும் இந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது வீட்டிலிருந்தவர்களுக்கு அதிர்ஷ்டவசமாக காயம் ஏதும் ஏற்படவில்லை.

ஹூசைனின் தாக்குதலுக்குள்ளான வீட்டில் கடந்த 16 ஆம் திகதி முஸ்லிம் காங்கிரஸின் உப தவிசாளர் பஷீர் சேகுதாவூத் தலைமையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று அப்பகுதி கட்சி உறுப்பினர்களை வரவழைத்து நடைபெற்றது.

இதனைக் கண்டித்து மாற்றுக் கட்சியினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக் கலாமென ஹூசைன் கூறினார். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வாழைச்சேனை பொலிஸார் இந்தத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இதற்கு முன்னர் நடைபெற்றிருந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இவரது வீட்டின் மீது கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பாரிய சூரிய சுவாலையால் இலங்கையின் தொடர்பாடல் வலையமைப்புக்கு பாதிப்பில்லை

## ஆர்தர் சி கிளாக் மைய பேச்சாளர் தெரிவிப்பு

ஒரு பாரிய புவி காந்தப் புயலை தோற்றுவித்த சூரியனின் சீற்றம் வானொலி தொடர்பாடலை குழப்பியுள்ளது. இனிவரும் நாட்களில் இது மின்வலு வலையமைப்பு, வானொலி தொடர்பாடலை ஏற்கனவே குழப்பிவிட்டது. இது கடந்த செவ்வாய்க்கிழமை சர்வதேச நேரப்படி 1.56 மணிக்கு நடந்தது என நாசா மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)


தொடர்பாடல், செய்மதி தொடர்பாடல் ஆகியவற்றைக் குழப்பலாம் என நாசா அறிவித்துள்ளது.

இருப்பினும் இந்தசீற்றத்தினால் இலங்கையின் தொடர்பாடல்வலையமைப்புக்கள் பாதிக்கப்படமாட்டாது என இலங்கையிலுள்ள ஆர்தர்சிகிளார்க்மையத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சீற்றத்தினால் ஸ்கெண்டிநேவிய நாடுகளும் துருவப் பகுதிகளுக்கு அண்மையில் உள்ள நாடுகளும் பாதிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். இதேவேளை வியாழன் கிரகம் அளவுள்ள சூரிய புள்ளியிலிருந்து புறப்படும் மின்னேற்றம் பெற்ற முதலுரு துணிக்கைகளாலான ஒரு வலுவான அலை கென் சீனாவின்

# நீங்காத நினைவில் வருடங்கள் இரண்டு

மண்ணில்
1989 . 04 . 01



விண்ணில்
2009 . 03 . 12

## சிவனேஸ்வரன் கிருசாந்

கிள்ளி விளையாடி
துள்ளித்திரிந்த கிருசாந்தே...
சொந்தங்களை மறந்து
சோகத்தினைத் தந்து விட்டு
மறைந்த மாயவனே...
எமையெல்லாம் பிரிந்து
எங்கு சென்றாயோ?

அழகு வதனத்தில்
அனைவரையும் கவர்ந்து
அகம் மகிழ்ந்த மைந்தனே...
ஆசையினை ஊட்டி எமையெல்லாம்
பாரினிலே பரிதவிக்க விட்டு
பறந்த மாயமென்னவோ?

25, கட்சன் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

தகவல் : குடும்பத்தினர்.
தொ.பே: 0778502083

(சி-2479)

# மரண அறிவித்தல்

## திருமதி மகிழ்மலர் ஜெயரட்ணம்



உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகிழ்மலர் ஜெயரட்ணம் நேற்று முன்தினம் (17.02.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் V.K ஜெயரட்ணம் (ஓய்வு பெற்ற C.T.Bசாரதி) அவர்களின் அன்பு மனைவியும் ஜெயமோகன்(ஆசிரியர்-ஸ்கந்தவ ரோதயாக்கல்லூரி), ஜெயபாஸ்கரன்(எழுதுவினைஞர்-யாழ். பல்கலைக்கழகம்-வவுனியா வளாகம்), காலஞ் சென்ற செல்வி ஜெயந்தி (முன்னாள் உடுவில் மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜெயமலர், சித்திராதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான துரை(அதிபர்), சந்திரபூமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜோயல் ஜெயப்பிரகாஷ், காருண்யா, ஜெயசலோமி, கரீஷ்ராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.02.2011) சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்வம் சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி, உடுவில்.
மோகன்-0779798073
பாஸ்கரன்-0779079428

தகவல்:
குடும்பத்தினர்

(சி-1093)

ஒவ்வொருவரும் உண்மை தம் பக்கம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், உண்மையின் பக்கம் அவர்கள் இருக்க விரும்புவதில்லை. —ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இலங்கை அரசாங்கம் சமயோசிதமாகச் செயற்பட்டது

பருத்தித்துறை மற்றும் மாதகல் கடற்பரப்புகளில் அத்துமீறி நுழைந்த தமிழக மீனவர்களைக் கைது செய்த விவகாரம் தமிழகத்திலும், மத்தியிலும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக சட்டசபைத்தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் தடல்புடலாக இடம்பெற்று வரும் வேளையில், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்படுதல், தமிழக மீனவர்களை வளைத்துப்பிடித்து பருத்தித்துறைக்கு கொண்டுவந்தமையாகிய சம்பவங்கள் தமிழகத்திலும், மத்தியிலும் பெரும் குழப்பத்தை தற்போது ஏற்படுத்தியுள்ளன.

முன்பெல்லாம் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுட்டுக்கொல்லும் நிகழ்வுகள் நடப்பதும்,

முதல்வர் கருணாநிதியின் இரங்கல் உரையோடு இறந்த மீனவரின் சடலம் புதைக்கப்படுவதுமே சாதாரண சடங்காக இருந்துவந்தது. ஆனால் இம்முறை பருத்தித்துறை கடற்பரப்பிற்குள் நுழைந்த மீனவர்களை வடமராட்சிக் கடற்றொழிலாளர்கள் வளைத்துப்பிடித்து இங்கு கொண்டு வந்ததாக கூறப்படும் சம்பவத்தால் தமிழகத்தை விட இந்திய மத்திய அரசு அதீதமாகக் கோபம் கொண்டது.

இதற்கு மேலாக நடந்த சம்பவத்தை கண்டித்து நாடாளுமன்ற உறுப்பினரும் முதல்வர் கருணா நிதியின் மகளுமான கனிமொழி தலைமையில் திராவிட முன்னேற்றக்கழகம் ஆர்ப்பாட்டம் செய்தது. இது தேர்தல் காலம் என்பதால் தி.மு.க. கொண்ட கோபத்தின் வெளிப்பாடெனலாம்.

எதுவாயினும் தமிழக மீனவர்களை கைது செய்தமை தொடர்பில் டில்லியில் இருந்து மத்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவும் கொழும்பிலுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகிய இருவரும் ஒருபுறம் தொலைபேசியில் பேச்சு நடத்த மறுமுனையில் சென்னையிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியும், யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தொலைபேசியில் மீனவர் விவகாரம் தொடர்பில் கலந்துரையாடினர்.

கலந்துரையாடப்பட்ட விடயங்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட மீனவர்களை விடுவிக்கும் உத்தரவு அவசர அவசரமாக விடுக்கப்பட்டது.

மீனவர்களை கைது செய்தால் நீதிமன்றத்தின் வழமையான நடைமுறைகளை பின்பற்றியே விடுதலை செய்யும் முடிவுகள் எடுக்கப்படும். ஆனால் நடந்ததோ வேறு.

ஐயா! வில்லங்கம் வேண்டாம். பிடித்த மீனவர்களை கௌரவமாக கொண்டுபோய் விடுங்கள் இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டது.

இந்த முடிவில் தாமதம் ஏற்பட்டிருந்தால் நிலைமை வேறுவிதமாக அமைந்திருக்கும். இது விடயத்தில் இலங்கை அரசு புத்திசாலித்தனமாக முடிவு எடுத்தது எனலாம்.

இத்தகைய புத்திசாலித்தனங்கள் தமிழர்களைத் தவிர மற்றைய எல்லா இனங்களிலும் இருக்கிறது என்றே எண்ணத் தோன்றுகிறது. இருந்தும் தமிழர்களிலும் தமிழர்களை ஏமாற்றும் திறன் அதிகம் தான்.

# தமிழக மீனவர் விவகாரம்

## இந்தியா கொடுத்த அழுத்தம் இலங்கை இராஜதந்திரிகள் சீற்றம்

(கொழும்பு)

இலங்கையில் தடுத்த வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு இந்தியா கொடுத்த அழுத்தங்கள் குறித்து இலங்கை இராஜதந்திரவட்டாரங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

இலங்கையைச் சேர்ந்த 85 மீனவர்கள் தென்னிந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்தியா தமது மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பது ஒரு நியாயமற்ற செயல் என இவ் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஆந்திராவில் கடந்த வருடம் 7ஆம் திகதி கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களை விடுதலை செய்வதற்கு ஆந்திர நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள போதிலும் அவர்களை இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அதிகாரிகள் இதுவரை எடுக்கவில்லை என இவ் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்நிலையில் பருத்தித்துறை கடற்பரப்பில் பிடிபட்ட இந்திய மீனவர்களை எதிர்வரும் 28ஆம் திகதி வரையும் மாதகல் கடற்பரப் பில் பிடிபட்ட இந்திய மீனவர்களை எதிர்வரும் முதலாம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் இவ் இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## வடக்கு துரித மீள் எழுச்சித்திட்டம் 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

### திட்டப் பணிப்பாளர் சிவகுமார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கு துரித மீள் எழுச்சித்திட்டத்திற்கு 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது என அத்திட்டத்தின் பணிப்பாளர் எஸ்.எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

வடக்கு துரித மீள் எழுச்சித்திட்டத்தின் உலகவங்கியின் மீளாய்வுக் கூட்டம் நேற்று யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மேற்படி திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட 750 கோடி ரூபாய் நிதியில் 200 கோடி ரூபாய் இது வரை செலவு செய்யப்பட்டுள்ளது.

இதில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேறிய வட மாகாணத்தைச் சேர்ந்த மக்களின் வீட்டுத்திட்டத்திற்கென பல கோடி ரூபாய் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 28 ஆயிரம் குடும்பங்களுக்கு இந்த வீட்டுத்திட்டத்திற்கென 25 ஆயிரம் ரூபாய் தொடக்கம் 35 ஆயிரம் ரூபாய் வரை நிதி வழங்கப்பட்டது.

இதேவேளை வட மாகாணத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த பகுதிகளில் வீதிகள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள் என்பனவும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் சில பிரதேசங்களில் பாடசாலைகள் மற்றும் அரச திணைக் களங்கள் புதிதாக அமைக்கப்பட வேண்டியும் உள்ளன.

வீதிகள் புனரமைப்புக்கென 100 கோடி ரூபாயும், நீர் விநியோகத்திற்கு 120 கோடி ரூபாயும், மற்றும் கட்டிடங்களின் புனரமைப்புப் பணிக் கென 100 கோடி ரூபாயும், ஏனைய திட்டங்களுக்கு 160 கோடி ரூபாய்க்கு மேலாகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

480 திட்டங்களை உள்ளடக்கிய இந்த வடக்கு துரித மீள் எழுச்சித்திட்டமானது குறித்த பிரதேசத்தின் பிரதேச செயலகர்களின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்படும்.

திட்டங்களுக்கென ஒதுக்கீடு செய்யும் நிதியை முறையாகப் பயன்படுத்தி அதனை துரிதப்படுத்தும் பிரதேசங்களுக்கு மேலும் நிதி வழங்கப்படும். இதன்மூலம் பிரதேச அபிவிருத்தியை அவர்கள் மேற்கொள்ள முடியும்.

பொது அமைப்பினரிடம் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளும்போது பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் தேசிய ரீதியில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## விபத்தில் முதியவர் மரணம் நாவாந்துறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை வைரவர் கோவிலடியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் முதியவர் ஒருவர் மரணமடைந்தார்.

அராலி கிழக்கைச் சேர்ந்த கே.சந்திரலிங்கம் (வயது 55)என்பவர் நேற்று துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த வேளை பின்னால் வந்த கார் விபத்துக்குள்ளானதில் அவர் சம்பவ இடத்திலேயே மரணமானார்.

காரை செலுத்தி வந்தவர் இராணுவச் சிப்பாய் என்பது குறிப் பிடத்தக்கது. மரணமடைந்தவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-6)

## கச்சதீவுக் கோரிக்கை அரசு நிராகரிக்காதது ஏன்?

### ரவி கருணாநாயக்க கேள்வி

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் மீனவர் விவகாரம் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. கச்சதீவை இந்தியா மீண்டும் தன்வசப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை அந்நாட்டின் பல்வேறு தரப்பினரும் வலியுறுத்திவரும் நிலையில் இவ்விடயம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? ஏன் இன்னமும் அரசாங்கம் அக்கோரிக்கையை நிராகரிக்கவில்லை? என ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க கேள்வியெழுப்பியுள்ளார்.

இலங்கை இந்திய மீனவர் விவகாரம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் பிரவேசிப்பதும் இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசிக்கும் சம்பவங்களும் அடிக்கடி நிகழ்கின்றன. இது பாரிய பிரச்சினையாகும். இது தொடர்பில் உரிய தீர்வுகாண அரசாங்கம் முன்வரவேண்டும்.

இந் நிலையில் கச்சதீவை மீண்டும் இந்தியா தன் வசப்படுத்த வேண்டும் என பல தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். கச்சதீவை வசப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரிப்பதாக ஏன் இன்னும் அரசு கூறமறுக்கின்றது. அது தொடர்பில் அரசு எந்தவிதமான ஆட்சேபத்தையோ கருத்துக்களையோ தெரிவிக்காமல் இருப்பது ஏன் என வினாவுகின்றோம் என்றார். (ந-5)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



தான் ஓர் ஆன்மா என்பதை இந்து நம்புகிறான். ஆன்மாவை வாள் வெட்ட முடியாது. நெருப்பு எரிக்க முடியாது, நீர் கரைக்க முடியாது. காற்று உலர்த்த முடியாது. ஒவ்வோர் ஆன்மாவும் சுற்றெல்லையில்லாத ஆனால் உடலை மையமாகக் கொண்ட ஒரு வட்டம். இந்த மையம் ஓர் உடலிலிருந்து மற்றோர் உடலுக்கு மாறிச் செல்வதே மரணம் என்று இந்து நம்புகிறான். சடப் பொருளின் நியதிகளுக்கும் ஆன்மா கட்டுப்பட்டதல்ல. அது இயல்பாகவே சுதந்திரமானது, தளைகள் அற்றது, வரம்பு அற்றது, புனிதமானது, தூய்மையானது, முழுமையானது. எப்படியோ அது, தான் சடத்துடன் கட்டுப்பட்டதாக தன்னைக் காண்கின்றது. எனவே தன்னைச் சடமாகவே கருதுகிறது.

# ஆக்ரோஷம் காட்டுமா பாகிஸ்தான்?

தொடர் வெடிகுண்டுத் தாக்குதல்களால் சர்வதேச நாடுகள் பாகிஸ்தான் சென்று கிரிக்கெட் விளையாடாமல் புறக்கணிப்பு, சூதாட்டப் புகாரில் சல்மான் பட், ஆசிப், அமீர் மீது நடவடிக்கை.

இப்படி சமீபகாலமாக ஏராளமான பின்னடைவுகள் பாகிஸ்தான் அணிக்கு. இடையில் உலகக் கிண்ண அணியை அறிவித்து விட்டு அணித் தலைவர் பெயரை அறிவிக்காமல் இழுத்தடித்த குழப்பம்.

தன்னம்பிக்கை இழந்த நிலையில் நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடரை வென்ற உற்சாகத்தில் உலகக் கிண்ணத் தொடரை எதிர் கொள்கிறது பாகிஸ்தான் அணி.

அணித்தலைவர் "ஆக்ரோஷ" அப்ரிடிதான். போட்டிக்கு நின்ற மிஷ்பா உல்ஹக் துணைத் தலைவர்.

அணி வீரர்கள் அனைவரும் பாகிஸ்தான் களங்கத்தை துடைக்க வேண்டுமென்ற வெறியோடு களமிறங்குகின்றனர்.

மூத்த வீரர் யூனிஸ் கான் இருக்கிறார். அதிரடி சகோதரர்கள் உமர் அக்மல், காம்ரன் அக்மல் உள்ளனர்.


இளம் வீரர்கள் முகாமட் ஹபீஸ், அகமெட்ஷக்சாத், அசாத் ஷாபீக் உள்ளனர். சர வெடியாய் வெடிக்க அப்துல் ரஷாக் காத்திருக்கிறார்.

கடைசிவரை போராடும் முடிவோடு பாகிஸ்தான் களமிறங்குவது உறுதி. பந்து வீச்சிலும் அக்தர் திறமைகாட்டுவார்.

அப்துர் றீமான், உமர் குல், சஜீத் அஜ்மல் புதிதாக சொகைல்தான் வீரருக்கு பதில் இளம் வீரர் ஜீனைட்கான் வேறு இருக்கிறார்.

பாகிஸ்தான் அணியை வைத்து சாதிக்க துடிக்கிறார் பயிற்றுவிப்பாளர் வக்கார் யூனுஸ்.

வெற்றிக் கொடி நாட்ட வேண்டும் என்பது அவரது விருப்பம். இதைத்தான் ஒட்டுமொத்த பாகிஸ்தான் அணியும் எதிர் பார்க்கிறது.




**அணித்தலைவர் - அப்ரிடி 2009 - 2011**

| | |
|---|---|
| ஆட்டம் | -21 |
| வெற்றி | -08 |
| தோல்வி | -12 |
| முடிபில்லை | -01 |

**பலம்** சகலதுறை வீரர்கள்

**பலவீனம்** வீரர்கள் சர்ச்சையில் சிக்குவது

மிரட்டலுக்கு




உமர் குல்

வேகத்திற்கு




அக்தர்

அதிரடிக்கு



அக்மல் சகோதரர்கள்

சரவெடிக்கு



ரஷாக்

சுழலுக்கு



றீமன்

# நம்பிக்கையுடன் இங்கிலாந்து

உலகிற்குக் கிரிக்கெட்டை அறிமுகம் செய்த நாடு என்ற பெருமை இங்கிலாந்துக்கு உண்டு. ஆனாலும் உலகக் கிண்ணத்தை ஒருமுறைகூடக் கைப்பற்றவில்லை.

இதுவரை 1979, 1987, 1992 என மூன்று முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறிய போதும் இங்கிலாந்து அணிக்கு உலகக் கிண்ண அதிர்ஷ்டம் ஒருமுறைகூட கைகூடவில்லை.

தவிர, கடந்த மூன்று தொடர்களில் லீக் சுற்றுடன் வெளியேறி ஏமாற்றியது.

இம்முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் அணிகளில் இங்கிலாந்து அணியும் முன்னிலையிலுள்ளது.

இதற்கமைய அணியில் பீற்றர்சன், பெல், திரோட் ஆகியோர் துடுப்பாட்டத்தில் அதிக நம்பிக்கை தருகின்றனர்.


அணித் தலைவர் ஸ்ரொரஸ், கொலின்வூட் ஆகிய மூத்த வீரர்களும் பிரிர், யார்டி ஆகியோரும் சாதிக்கத் தயாராகவுள்ளனர்.

பந்துவீச்சில் அன்டர்சன், பிரோட், பிரஸ்னன் போன்றோர் நம்பிக்கை தருவதுடன் சுழல் பந்துவீச்சில் முன்னணி வீரர் சுவான், இந்தியத் துணைக் கண்டத்து நாடுகளில் எழுச்சி பெறும் பட்சத்தில் இங்கிலாந்து அணியின் உலகக் கிண்ணப் பயணம் வெற்றிகரமாகத் தொடரும் என்றே நம்பலாம்.

இங்கிலாந்து அணியில் பலமான தலைவராகத் தயாராகியுள்ளார் ஸ்ரொரஸ். இக்கட்டான நேரங்களில் அணியைச் சிறப்பாக வழி நடத்தும் ஸ்ரொரஸ் இங்கிலாந்து அணியின் உலகக் கிண்ணக் கனவை முதன்முறையாக நிறைவேற்றுவாரா?

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை இழந்தாலும் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வரிசை கடைசி வரைக்கும் வலுவாகவேயுள்ளது.

மிரட்டலுக்கு



பீற்றர்சன்



ஸ்ரொரஸ்


**அணித் தலைவர் ஸ்ரொரஸ் 2006 – 2011**

| | |
|---|---|
| ஆட்டம் | 55 |
| வெற்றி | 24 |
| தோல்வி | 30 |
| முடிபில்லை | 01 |

**பலம்**
கட்டுக்கோப்பான அணி


**பலவீனம்**
தொடர் தோல்வி

சுழலுக்கு




சுவான்

அதிரடிக்கு




திரோட்

சரவெடிக்கு




யார்டி

வேகத்திற்கு



அன்டர்சன்

# மைதானங்கள் ஒரு பார்வை



**ஷேர்-இ பங்களா மைதானம் (டாக்கா)**

பங்களாதேஷின் டாக்காவில் அமைந்துள்ள ஷேர்-இ பங்களா மைதானத்தில் 35 ஆயிரம் பேர் வரை போட்டியைக் கண்டுகளிக்கலாம். மைதானம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. உலகக் கிண்ணத் தொடரில் இன்று நடைபெறும் முதலாவது போட்டி இங்கு நடைபெறவுள்ளது. அத்துடன் 3 லீக் போட்டிகளும் 2 காலிறுதிப் போட்டிகளும் இம்மைதானத்தில் நடைபெறவுள்ளன. (தொடரும்)

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

# முதலாவது போட்டியில் இன்று இந்தியா-பங்களாதேஷ் பலப்பரீட்சை



(மிர்பூர்)

உலகக்கிண்ண தொடரில் இன்றிய முதல் சவாலில் இந்திய-பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன.

சொந்தமண்ணில் களமிறங்கும் பங்களாதேஷ் அணி எளிதில் விட்டுக்கொடுக்காது என்பதால் ஆக்கிரோசமான மோதலை எதிர்பார்க்கலாம்.

இந்திய துணைக்கண்டத்தில் 10 ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

மிர்பூரில் உள்ள ஷேரி பங்களா தேஷிய மைதானத்தில் இன்று நடக்கும் பி பிரிவு லீக் போட்டியில் (பகல்-இரவு) இந்தியா-பங்களா தேஷ் அணிகள் மோதுகின்றன.

### துடுப்பாட்ட பலம்

இந்திய அணியை பொறுத்த வரை ஒரு நாள் போட்டிகளில் மகத்தான எழுச்சி கண்டுள்ளது. உள்ளூர் தவிர அந்நிய மண்ணிலும் வெற்றிக்கொடி நாட்டியுள்ளது. சமீபத்தில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரை 5:0 என வென்றது.

இதன் மூலம் ஒருநாள் போட்டிக்கான தரவரிசைப்பட்டியலில் இரண்டாவது இடத்தை (119 புள்ளி) தக்க வைத்துக்கொண்டது. துடுப்பாட்டம் தான் அணியின் மிகப்பெரும் பலம். ஆரம்பத்தில் அதிரடிகாட்ட சேவாக் உள்ளார்.

மறுமுனையில் அனுபவ சச்சின் மீண்டும் ஒருமுறை அசத்தவுள்ளார் 6 ஆவது முறையாக உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்கும் இவர் மீண்டும் ஓட்டமழை பொழியலாம்.

கௌதம் காம்பீர் தனது வழக்கமான ஆட்டத்தை வெளிப்படுத்தலாம். யுவராஜ் சிங் சிக்ஸர் மன்னனாக தன்னை அடையாளம் காட்ட வேண்டும். இவர்களைத்தவிர சுரேஷ் ரெய்னா், யூசுப்பதானும் சிறப்பான நிலையில் உள்ளனர்.

நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் போட்டிகளில் அதிரடிச்சதம் அடித்து யூசுப்தனது இடத்தை உறுதிசெய்துள்ளார்.

### தோனி அபாரம்

நியூசிலாந்துக்கு எதிரான உலகக்கிண்ண பயிற்சிப்போட்டியில் மின்னல்வேக சதமடித்த தோனி, இழந்த போர்மை மீட்டுள்ளார். அணியில் மாற்று விக்கெட் காப்பாளர் இல்லாத தால்துடுப்பாட்டம், விக்கெட்காப்பாளர், அணித்தலைவர் என மூன்று பணிகளையும் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

மிக நீண்ட துடுப்பாட்டவரிசை இருப்பதும் ஒரு விதத்தில் சிக்கலை ஏற்படுத்துகிறது. ஹோலியை நீக்குவதா?, யுவராஜை தேர்வு செய்வதா? என்ற குழப்பம் காணப்படுகின்றது.


### ஹர்பஜன் பலம்

பந்துவீச்சில் அனுபவசகீர், நெகரா, ஹர்பஜன் அசத்தலாம் அணியில் இடம்பிடிக்க முனாப், சிறிசாந்த் இடையே கடும்போட்டி நிலவுகிறது. இதைபோல் சுழல் வீரர்களான அஸ்வின், பியூஸ் சாவ்லா இடையேயும் போட்டியுள்ளது.

பயிற்சிப் போட்டிகளில் சாவ்லா கலக்கினார். ஆனால் தமிழக வீரர் அஸ்வின் மீது அணித்தலைவர் தோனி நிறைய நம்பிக்கை வைத்துள்ளார். சரியான வீரர்களை தேர்வு செய்யும் பட்சத்தில் இந்திய அணி பங்களாதேஷ் அணியை எளிதில் வீழ்த்தி தொடரை வெற்றிகரமாக ஆரம்பிக்கலாம்.

### பங்களாதேஷ் வளர்ச்சி

கடந்த 2007 உலகக்கிண்ண தொடருக்குப்பின் பங்களாதேஷ் அணி அசுர வளர்ச்சி கண்டுள்ளது. சமீபத்தில் நியூசிலாந்துக்கு எதிரான



சமீபத்தில் நியூசிலாந்திற்கு எதிரான ஒரு நாள் தொடரை 4:0 என வென்றது. ஒரு நாள் தொடருக்கான தர வரிசைப் பட்டியலில் 8வது இடத்தில் (66 புள்ளி) உள்ளது.

துடுப்பாட்டத்தில் தமிம் இக்பாலை தான் பெரிதும் சார்ந்துள்ளது. கனடாவுக்கு எதிரான உலகக் கிண்ணப் பயிற்சிப் போட்டியில் 50பந்துகளில் 69 ஓட்டங்கள் விளாசினார்.

இவர் வெளியேறிவிட்டால் ஒட்டு மொத்த அணியும் ஆட்டம் காண்பது தான் மிகப் பெரும் பலவீனம்.

இம்ருல் கைஸ், அனுபவ அஸ்ரப் புல், நபீஸ் நம்பிக்கை தருகின்றனர். முழங்கால் காயம் காரணமாக மோர்டசா இடம்பெறாதது பின்னடைவு. ஆனாலும் வேகத்தில் மிரட்ட ருபெல் ஹுசைன், நஸ்மல் ஹுசைன் உள்ளனர்.

### சுழல் பலம்

சுழலில் அசத்த அணித்தலைவர் சகீப் அல் ஹசன், அப்துர் ரசாக், சித்திக், ரகிப்புல் ஹசன் என நிறையப்போர் இருக்கின்றனர். இதில் துடுப்பாட்டத்திலும் அசத்தக் கூடிய அணித்தலைவர் சஹீப் மீது அதிக எதிர்பார்ப்பு காணப்படுகின்றது. இவருக்கு மற்றவர்கள் கைகொடுக்கும்பட்சத்தில்பங்களாதேஷ் சவால் கொடுக்கலாம்.

## இலங்கையில் நடைபெறும் போட்டிகளுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

உலகக்கிண்ண கிரிக்கெட் பாதுகாப்பு தொடர்பாக தெளிவூட்டும் விசேட செய்தியாளர் சந்திப்பொன்று பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரியவின் தலைமையில் நேற்று பிற்பகல் இடம் பெற்றது.

பொலிஸ் தலைமையகத்தில் இடம் பெற்ற இந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த பொலிஸ்மா அதிபர், இந்த போட்டிகளின் பொருட்டு பாரிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதில் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொதுமக்களின் அசௌகரியங்களை மட்டுப்படுத்தும் நோக்கில் விசேட போக்கு வரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் இந்தப் போட்டிகள் நடைபெறும் மைதானங்களுக்கு செல்லும் ரசிகர்கள் அனைவரும் சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

நாட்டிற்கு அபகீர்த்தி ஏற்படாத வகையில் ரசிகர்களின் செயற்பாடுகள் அமைய வேண்டும். மேலும் பாதுகாப்புப் படைத்தரப்பினரைத் தவிர, ஆயுதங்களை வைத்திருக்க அனுமதி பெற்றவர்களும் கூட ஆயுதங்களை மைதானத்திற்குள் எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தவிர பட்டாசு மற்றும் வாண வேடிக்கைகள் போன்றவற்றை உபயோகிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை-கனடா அணிகளுக்கிடையிலான லீக் போட்டி நாளை அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் பங்குபற்றவுள்ள இலங்கை அணியினர் அம்பாந்தோட்டைக்கு விமானப்படையின் உலங்கு வான் ஊர்தியில் வந்து இறங்கியபோது...



## நாளைய ஆட்டங்கள்

**கென்யா எதிர் நியூசிலாந்து**
நேரம்:-காலை 9.30 மணி
சென்னை

**இலங்கை எதிர் கனடா**
நேரம்: மாலை 2.30 மணி
மைதானம்: அம்பாந்தோட்டை.




உலகக்கிண்ண கிரிக்கெட்-2011

சம்பியனாகும் நாடு?.............................

தொடர் நாயகன் விருது யாருக்கு?.....................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்.............................

முகவரி.............................

தொலைபேசி.............................

தே.அ.அ.இல.............................

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



இன்னும் பல பரிசுகள்



PCS PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road,Jaffna.
T.P.021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk

# 75 உள்ளூராட்சி சபைகளு...

அத்துடன் நாடளாவிய ரீதியில் பிரதான கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் தாக்கல் செய்த சில வேட்பு மனுக்கள் தேர்தல்கள் திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்டன.

இவ்வாறு வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட பிரதான கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளன.

இதற்கமைய யாழ்.மாவட்டம் உட்பட 75 உள்ளூராட்சி சபைகளின் வேட்பு மனு நிராகரிப்புத் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவ் வழக்குத் தொடர்பான மேன் முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பு தாமதமாவதால் தேர்தலிற்கான வாக்குச்சீட்டு உட்பட ஆவணங்களை அச்சிடுவது தாமதமாகின்றது.

இதனால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள யாழ். மாவட்டத்திலுள்ள 16 உள்ளூராட்சி சபைகள் உட்பட நாடளாவிய ரீதியிலுள்ள 75 சபைகளிற்கான தேர்தலை தேர்தல்கள் திணைக்களம் ஒத்திவைக்கத் தீர்மானித்துள்ளது.

இதேவேளை அக்குரஸ்ஸ, அக்மீமன, மொனராகலை ஆகிய பிரதேச சபைகளுக்கு எதிர்வரும் மார்ச் 17 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு விதித்துள்ளது.

தமது வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் சுயேட்சைக்குழுக்களும் தாக்கல் செய்த மனு ஒன்றை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# அரசியல் தீர்வை அரசு முன்வை...

காக பணிய வைப்பதை விட அதிகாரப் பரவலாக்கல் வழங்குவதற்குரிய வழிவகைகளைஏற்படுத்த வேண்டுமென அண்மையில் அமெரிக்காவில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் மத்திய மற்றும் தெற்காசியாவுக்கான அமெரிக்காவின் முன்னாள் துணைச் செயலர் தெரிவித்திருந்தார்.

எவ்விதமான சர்வதேச போர் குற்ற விசாரணைகளுக்கும் ராஜபக்ஷ அரசாங்கம் அனுமதி வழங்கப் போவதில்லை. இப் புறநிலையில் எல்லோரும் இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெற்ற போர் குற்றங்களிலும், அதற்குரிய பதில் சொல்லும் பொறுப்புக்கள் மற்றும் தண்டனைகளிலும் அதீத கவனத்தைச் செலுத்துவது நடைமுறைக்கு மாறானதாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

போர் மீறல் குற்றங்களை ஆயுதமாகப் பயன்படுத்துவதன் மூலம் ராஜபக்ஷ அரசாங்கத்தை ஒரு அரசியல் தீர்வுக்கு இட்டுச் செல்வதற்கு அழுத்தம் கொடுப்பதே அமெரிக்காவின் புதிய மூலோபாயமாக வுள்ளது.

இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே மகிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைக்கு ஒத்துக்கொண்டிருந்தார். அரசியல் தீர்வைக் காணும் வகையில் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்துமாறு இந்தியா பல சந்தர்ப்பங்களில் மகிந்த ராஜபக்ஷவைக் கோரி வந்துள்ளது. ஆனால் மகிந்த அரசாங்கம் அது சார்ந்த எதுவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. பிரித்தானியப் பயணம் தோல்வியில் முடிந்ததை அடுத்தே முதன் முதலாக கூட்டமைப்புடன் ஜனாதிபதி மகிந்த பேச முன்வந்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத்தீர்ப்பதற்கு அரசாங்கம் போதிய முயற்சிகளை எடுக்கவில்லை என்று தனது தமிழ் நாட்டுக்கான பயணத்தின்போது ராகுல் காந்தி குறிப்பிட்டமையும் மகிந்த த.தே. கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

போர் குற்றங்களுக்கான பொறுப்புக்களைக் கண்டறிவது தொடர்பில் ஐ.நாவினால் அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் அறிக்கைகளைக் கையளிக்கப்படுவதற்குரிய காலக்கெடு அறிவிக்கப்பட்டமையும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுப்பதற்குரிய மற்றோர் காரணம் என்று அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)


## மரண அறிவித்தல்

### திருமதி கண்ணகை அம்மா பொன்னம்பலம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கண்ணகை அம்மா பொன்னம்பலம் 17.02.2011 (வியாழக்கிழமை) இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம் ('ஆதவன்', ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை காமாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி, நடராசா, நாகேஸ்வரி, சரஸ்வதி, புஸ்பவதி மற்றும் நாகேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

காலஞ்சென்ற வைத்தீஸ்வரன் (பொறியியலாளர் இ.மி.ச), மற்றும் ஸ்கந்தேஸ்வரன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகஸ்தர், கட்டடங்கள் திணைக்களம்), கைலேஸ்வரி (ஆசிரியை, மகாஜனசபை ஈஸ்வரன் முன்பள்ளி), ஞானதேசிகன் (பிரதி அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீரஞ்ஜனி, ப.இராஜகோபாலன் (நிருவாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம்- தெல்லிப்பளை), ஜீவச்சந்திரமணி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி விசித்தா சிவகாந்தன் (பொறியியலாளர் U.K), சுதாகரன் (பொறியியலாளர்- சிங்கப்பூர்), கஜானன் (U.K), ஸ்ரீவத்சன் (பொறியியலாளர்), ஸ்ரீபுராதனி (இலங்கை வங்கி வடமாகாணக் காரியாலயம், யாழ்ப்பாணம்), ஸ்ரீகிரீசன் (MCS IT Campus), மயூரதன் (மலேசியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லதுர்சனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 20.02.2011 (ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணிக்கு அளவெட்டி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
'ஜோதி வாசம்' பிள்ளைகள், மருமக்கள்,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி. (3838) பேரப்பிள்ளைகள்.

## மணமகன் தேவை

இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 7இல் செவ்வாய் (கிரகபாவம் 55) உடைய 1981 ஆம் ஆண்டு பிறந்த உயர் பதவி வகிக்கும் பட்டதாரிப் பெண்ணுக்கு தகுதியான (டாக்டர், பொறியியலாளர், கணக்காளர், வங்கித்துறை) மணமகன் தேவை.

தொடர்பு: 0773775767 (சி-2487)

## புலமைப் பரிசில்-2011

(நாவலர் வெளியீடு)
பயிற்சிப் பரீட்சை ⑨ல் அதிகூடிய புள்ளி பெற்றோர்

- சி.நாகபூசணி-163 (சாவ/இந்து ஆரம்ப பாடசாலை)
- க.கியூறி -161 (புனித ஜோன் பொஸ்கோ)
- ந.கஜேந்திரன் -158 (புனித ஜோன் பொஸ்கோ)

அடுத்த பரீட்சை ⑩
20.02.2011 (ஞாயிறுதோறும்)
பரீட்சை நேரங்கள்
காலை 8.00-10.00 மாலை 2.00-4.00
" 900-11.00 " 300-5.00
" 10.00-12.00 " 4.00-6.00

விரும்பிய நேரங்களில் வெளி மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றலாம்.

நாவலர்
ஆனைப்பந்தி சந்தி,யாழ் நகர். (சி-2482)

## விற்பனைக்கு

WA -Series
Pulsur
180 - Digital
Black

தொடர்புகளிற்கு:
Mobile No:0772726635 (3844)

## காணி விற்பனைக்குண்டு

மானிப்பாய் சந்தியில் இருந்து 100 M தொலைவில் சுந்தர்சன் நிறுவனத்திற்கு அருகில் 2 பரப்புக் காணியும், நாவலி வடக்கு அட்டகிரி பாடசாலை, அட்டகிரி முருகன் கோயிலுக்கு அருகாமையில் 6 பரப்புக் காணி வீட்டுடனும் விற்பனைக்கு உள்ளன. உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P.: 021 4908147 (3843)

## நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்

A/L 2011 CHEMISTRY
PAPER CLASS
திரு.N. மகேஸ்வரன்
ஆரம்பம்: 14.02.2011 திங் -6.30 PM (C-2483)


# இந்திய மீனவர்...

விடுவிக்கப்படுவார்கள் எனத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை தமிழக மீனவர்கள் தொடர்பில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழக முதல்வர் கருணாநிதியின் மகளுமான கனிமொழி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மேற்படி விபரங்களை எடுத்துக் கூறியிருந்தார்.

இதனையடுத்து தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி பணித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

விடுதலை பெற்ற இந்திய மீனவர்கள் தமது சொந்தப் படகுகள் மூலம் தாயகம் திரும்பினர். இவர்களை வழியனுப்பும் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உடனிருந்தார். (ந-5,6,10,24)

# ஐ.தே.கவுக்கு...

அரசுபக்கம் தாவிய சிலருக்கு மீண்டும் தமது பழைய கட்சிக்கே திரும்பிவிடுவது குறித்து சிந்திக்கத் தொடங்கியுள்ளதாகவும் அவ்வறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது.

அரசாங்கத்தின் உயர்மட்டமுக்கியஸ்தர்கள் செல்வாக்கிழந்து வருகின்றமை, கட்சிக்காகப் பாடுபட்டவர்களைவிட ராஜபக்ஷ குடும்பத்தினருக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றமை என்பன போன்ற செயற்பாடுகளே ஆளும் கட்சி முக்கியஸ்தர்கள் மத்தியில் அதிருப்தியை உருவாக்கியிருப்பதாகவும் அவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

பிரஸ்தாப அறிக்கை கிடைத்தவுடன் அதில் குறிப்பிட்டுள்ள அமைச்சர்களைத் திருப்திப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, உள்ளூராட்சித் தேர்தலின் பின் அவர்களுக்கு முக்கியத்துவம் மிக்க அமைச்சுப் பொறுப்புகளை வழங்குவதாக வாக்களித்துள்ளதாகவும் அலரி மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-5)


## யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி

இல்ல மெய்வல்லுநர் போட்டி-2011

காலம் :- 19.02.2011 (சனிக்கிழமை)
நேரம் :- பி.ப.1.30 மணி
இடம் :- கல்லூரி மைதானம்

தலைவர்
திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்கள்
(கல்லூரியின் முதல்வர்)

முதன்மை விருந்தினர்
கௌரவ அமைச்சர் திரு. K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்கள்
(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சர்)

சிறப்பு விருந்தினர்கள்
திரு.வி.சோமநாதனும் பாரியார் அவர்களும்
(பழைய மாணவர் சங்கச் செயலாளரும், முன்னாள் உதைபந்தாட்ட வீரரும்)
திரு. C. இராசநாயகமும் பாரியார் அவர்களும்
(கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், ஓய்வுபெற்ற கல்வி அதிகாரியும்)
திரு.வே.பாலசுப்பிரமணியம் அவர்கள்
(கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரிச் சமூகத்தினர்,
யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி,
உரும்பிராய்.

## ALLIANCE FRANCAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna

Learn French the French Way

யாழ்ப்பாணத்தில் French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு மொழி பயிலும் மையமான Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

6 மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்கு தோற்றலாம்.
வகுப்புக்கள் :சனி, ஞாயிறுகளில்....

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com
மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம். (3842)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.